# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆனி 16 செவ்வாய்க்கிழமை (01-07-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:216


# தமிழர்களின் எதிர்பார்ப்புகளை அரசு நிறைவேற்றினாலே பேச்சு தொடரும்!

## ஜப்பான் தூதர் ஒட்சுகாவிடம் தமிழ்ச்செல்வன் வலியுறுத்து

கிளிநொச்சி,ஜூலை1

**சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கவேண்டுமாயின் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் தீக்கமான முடிவுகளை அரசு எடுக்கவேண்டும் என்று தன்னைச் சந்தித்த ஜப்பானியத் தூதரிடம் வலியுறுத்தியதாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

கிளிநொச்சியில் ஜப்பானியத் தூதுவர் ஒட்சுகாவை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் தமிழ்ச்செல்வன் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

கிளிநொச்சிக்கு நேற்று வருகை தந்த ஜப்பானியத் தூதர் ஒட்சுகா விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்தினார்.

நேற்று நண்பகல் 12 மணி முதல் 1.30 மணிவரை இப்பேச்சு இடம்பெற்றது.

இந்தப் பேச்சின்போது இலங்கைக்கான ஜப்பானியத் தூதரகத்தின் இரண்டாவது செயலாளர்களான எம்.யத்தா, கே.யகி மற்றும் கே.மியாத்தா ஆகியோர் தூதருடன் கலந்துகொண்டனர்.

தற்கால அரசியல் நிலை குறித்தும் டோக்கியோ உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாகப் புலிகளின்

(14ஆம் பக்கம் பார்க்க)



நேற்று கிளிநொச்சியில் தன்னைச் சந்திக்க வந்த இலங்கைக்கான ஜப்பானியத் தூதர் ஒட்சுகாவை கைலாகு கொடுத்து வரவேற்கிறார் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

## போலீஸ்பதிவு என்று படிவம் தந்தால் பொதுமக்களே கிழித்து எறியுங்கள்!

### உள்துறை அமைச்சர் கூறுகின்றார்

கொழும்பு,ஜூலை1

"மீண்டும் பொலீஸ் பதிவு என்ற பேச்சுக்கே இடமில்லை. பொலீஸார் உங்கள் பெயர்களைப் பதிந்துகொள்ள வேண்டும் என விண்ணப்பங்களைக் கொடுத்தால் அவற்றைக் கிழித்து எறியுங்கள்."

இப்படிக் கூறியிருக்கின்றார் உள துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கை என்றவுடன் தமிழ் மக்கள் மத்தியில் தற்போது அச்சமும் பீதியும் அதிகரித்துள்ளன.

மீண்டும் கொழும்பில் வாழும் தமிழர்கள் தம்மை பொலீஸில் பதிந்து கொள்ளவேண்டும் என்ற பிரசாரமும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இதில் எந்த உண்மையும் இல்லை. தமிழ் மக்கள் அச்சப்பட வேண்டிய அவசியமே இல்லை. தமிழ் மக்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

"ஆனால், தெஹிவளை, புறக்கோட்டை பொலீஸ் நிலையங்களில் இருந்து தமிழ்க் கடைகளுக்கும் தமிழ் வீடுகளுக்கும் விண்ணப்பப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## நெடுங்குளம் எச்சங்களைச் சோதிக்க காலியிலிருந்து சட்டவைத்திய நிபுணர்

யாழ்ப்பாணம்,ஜூலை1

அரியாலை, நெடுங்குளம் பகுதியில் காணப்படும் மனித எச்சங்கள் எனக் கருதப்படும் எலும்பு எச்சங்களைப் பரிசோதனை செய்யும் பணியில் காலி மாவட்ட வைத்தியசாலை சட்ட வைத்திய நிபுணரை ஈடுபடுத்துவதற்கு யாழ்.நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அரியாலைப் பகுதியில் கடந்த வாரம் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனத்தின் தொண்டர்கள் அந்தப் பகுதியில் மனித எச்சங்கள் எனக் கருதப்படும் எச்சங்களைக் கண்டு பொலீஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

இந்த விவகாரம் குறித்து யாழ். பொலீஸார், யாழ்நீதிவான் ஆர்.ரி.விக்னராஜாவின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

எச்சங்கள் காணப்படும் இடத்தில் கண்ணிகள் புதைக்கப்பட்டுள்ளதால் அவற்றை அகற்றியபின்பே அந்தப் பகுதிக்குச் சென்று விவரங்களைச் சேகரிக்க முடியும் என்றும் பொலீஸார் நீதிவானிடம் தெரிவித்தனர்.

அதேசமயம் -

அந்தப் பகுதியில் காணப்படும் எச்சங்கள் மனித எச்சங்களா? அல்லது மிருகங்களின் எச்சங்களா? என்பதைக் கண்டறிய பரிசோதனை மேற்கொள்ள காலி வைத்தியசாலை சட்ட வைத்திய நிபுணர் நுவான்டரலை அழைப்பது என்று யாழ்.நீதிமன்றம் முடிவுசெய்தது.

இந்த முடிவு அவருக்குத் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து அவர் யாழ். நதிவான் ஆர்.ரி.விக்னராஜாவுடன் நேற்றுத் தொடர்புகொண்டு பேசினார்.

எச்சங்களை நேரடியாகப் பரிசோதனை செய்ய தாம் உதவுவதாகவும் -

யாழ்ப்பாணம் வருவதற்கான திகதியை விரைவில் அறிவிப்பதாகவும் - அவர் நீதிவானிடம் தெரிவித்துள்ளார்.

(ம-3)

## கப்பல் தாக்கப்பட்டமை குறித்த கண்காணிப்புக் குழுவின் அறிக்கை முழுமையாக ஏற்கமுடியாத ஒன்று

### தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை1

'முல்லைத்தீவில் எமது வர்த்தகக் கப்பல் கடற்படையால் தாக்கி அழிக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு விடுத்துள்ள அறிக்கையை நாம் முழுமையாக ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை' என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இப்படிக் கூறியுள்ளார்.

'கண்காணிப்புக் குழுவின் அறிக்கை தொடர்பாக எமது நிலைப்பாட்டை விளக்கி அறிக்கை ஒன்றை கண்காணிப்புக் குழுவுக்கு விரைவில் அனுப்பவிருக்கின்றோம்' என்றும் அவர் கூறினார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் தின நிகழ்வுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை1

எதிர்வரும் ஜூலை 5ஆம் திகதி கரும்புலிகள் தினத்தை வலிகாமம் கோட்டத்தில் எழுச்சிகரமாக நினைவு கூர்வதற்கான ஏற்பாடுகளை 'கரும்புலிகள் நினைவு நாள் ஏற்பாட்டுக் குழு' முன்னெடுத்துள்ளது.

வலிகாமம் கோட்டத்தில், மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கில் அமைக்கப்படவுள்ள மாவீரர் அரங்கில் நினைவுநாள் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

## பேரணி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை1

மூவின மக்களும் ஒன்றிணைந்து இன்று வவுனியாவில் நடத்தவிருந்த சமாதானப் பேரணி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பேரணியின் ஏற்பாட்டாளர்களான 'மக்கள் சமாதான அமைப்பு' அறிவித்துள்ளது.

வவுனியாவிலுள்ள பிரதான சைவ கோயில்கள், பௌத்தவிகாரை, பள்ளிவாசல் மற்றும் கிறிஸ்தவ ஆலயம் ஆகிய ஐந்து இடங்களிலிருந்து இப் பேரணிகள் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்ததாகவும் -

எனினும் அதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி அடையாத காரணத்தால், பேரணி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் - ஏற்பாட்டாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

### ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய

## தமிழ்க் குழுக்களின் அலுவலகங்களுக்கு வடக்கில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

யாழ்மாவட்டத்தில் இயங்கிவரும் தமிழ்க் குழுக்களின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்க் குழுக்களின் அலுவலகங்கள் அமைந்துள்ள பகுதிகளில் புதிதாக காவலரண்கள் அமைக்கப்பட்டு 24 மணிநேரமும் பாதுகாப்பு வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) உபதலைவர் தம்பிராஜா சுபத்திரன் கடந்த மாதம் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். இதனையடுத்து, ஜனாதிபதி வழங்கிய பணிப்புரைக்கு அமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்க் குழுக்களின் அலுவலகங்களுக்கு முன்பாக சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடும் அனைவரும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறார்கள்.

(ஒ-9)

### பொ.ஐ.மு-ஜே.வி.பி. உடன்பாடு ஏற்பட்டு

## 3 மாதங்களில் பொதுத்தேர்தல் ஜனாதிபதியின் திட்டம் இதுவாம்!

கொழும்பு,ஜூலை1

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் ஒருமைப்பாட்டு உடன்படிக்கை எதிர்வரும் 15ஆம் திகதியளவில் கைச்சாத்திடப்படும் எனவும் - அதன் பின்னர் மூன்று மாதங்களில் பொதுத்தேர்தலை எதிர்கொள்ள ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாகவும் - கூறப்படுகிறது.

ஜனாதிபதி அலுவலகத்தை மேற்கோள்காட்டி சிங்களப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் இடம்பெற்றுவரும் பேச்சுக்கள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதாகவும்-

இரு கட்சிகளுக்கும் இடையிலான உடன்பாடு எதிர்வரும் 15ஆம் திகதி

(14ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுத் தொடர்பான பணியை பாலசிங்கமே தொடர்வார்!

கிளிநொச்சி,ஜூலை1

விடுதலைப் புலிகளின் சமாதானப் பேச்சுக் குழுவின் தலைவரான மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமே தொடர்ந்து சமாதானப் பேச்சுத் தொடர்பான விடயங்களை மேற்கொண்டு வருகின்றார் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறினார்.

சமாதானப் பேச்சுவார்த்தைப் பணிகளில் இருந்து அன்ரன் பாலசிங்கம் ஓரங்கட்டப்பட்டு, தமிழ்ச்செல்வனிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வெளிவந்துள்ள செய்திகள் குறித்துக் கேட்டபோது "இது ஊடகங்களின் ஊகம்" என்று பதில் அளித்தார் தமிழ்ச்செல்வன்.

மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துக்கு இடைக்காலத்தில் சுகயீனம்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரம்

# 299 சந்தேகநபர்கள், 23 குற்றவாளிகள் சுற்றிவளைப்புகளின் போது கைதாகினர்!

## உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தகவல்

கொழும்பு,ஜூலை1

**மேல்மாகாணத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாதாள உலகக் கோஷ்டியினர் உட்பட 23 குற்றவாளிகளும் 299 சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். கொழும்பில் மட்டும் 127 சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. - இப்படி உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.**

மேல்மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் தேடுதல் நடவடிக்கைகள் குறித்து உள்துறை அமைச்சில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் அமரதுங்க விளக்கமளித்தார்.

அமைச்சர் ஜோன் அமரதுங்க மேலும் தெரிவித்ததாவது:-

தலைநகரிலும் சுற்றுவட்டாரங்களிலும் மேற்கொள்ளப்பட்டுவரும் தேடுதல் நடவடிக்கைகளில் பல்வேறு கொலை, கொள்ளைகள், போதைப்பொருள் கடத்தல் என்பன தொடர்பாகத் தேடப்பட்டு வந்த கிரிமினல்களும், பாதாள உலகத்தினரும் இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதுவரை 299பேர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்திற்குட்பட்ட மூன்று பிரதிப் பொலீஸ்மா அதிபர்கள் பிரிவுகளிலும் 127 தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 305 நடமாடும் வாகன ரோந்து நடவடிக்கைகளும் 876 வீதித் தடை சோதனைகளும் 590 பொலீஸ் கால்நடை ரோந்து நடவடிக்கைகளும், தேடுதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

மேல்மாகாணத்தின் தென் பிராந்தியத்தில் 48 வீதித்தடை சோதனைகளும் 14 மோட்டார் சைக்கிள் ரோந்துச் சேவைகளும் 414 தேடுதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளின்போது தேடப்பட்டு வந்த கிரிமினல் குற்றவாளிகள் 23பேர் கைதாகியுள்ளனர். இவர்களுள் நான்கு பேர் பாதாள உலகப் பெரும் புள்ளிகள். இந்த நடவடிக்கைகளின்போது கிம்புலாவ எல்ல என்ற பகுதியில் 299பேர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டனர். அங்கு 2ஆயிரத்து 45 பேர் சோதனைக்குள்ளாக்கப்பட்டனர்.

மேல்மாகாணத்தின் தென்பிராந்தியத்தில் 33பேர் கைதுசெய்யப்பட்டனர். நான்கு இடங்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. 364 நடமாடும் சோதனை நடவடிக்கைகளும் 115 மோட்டார் சைக்கிள் ரோந்துகளும் 177 பொலீஸ் ரோந்து சேவையும் 15 ரேடியோ கார் ரோந்து சேவைகளும் 106 சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளும் நடத்தப்பட்டுள்ளன.

கடந்த ஒருவார காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளினால் பெருமளவு குற்றச் செயல்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

மேல்மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளும் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளும் தனியொரு சமூகத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படுவதல்ல. இங்கு வாழும் அனைத்து இன மக்களுக்கும் பாதுகாப்பு வழங்குவதே இந்த நடவடிக்கை.

ஒரு சில ஊடகங்கள் மீண்டும் வீதித் தடை, திடீர் சோதனை, சுற்றிவளைப்பு அமுல் செய்யப்பட்டிருப்பதாக பிரசாரம் செய்கின்றன. இது தவறு. எந்தவொரு பகுதியிலும் நிரந்தரமான வீதித் தடைகளோ, சோதனைச் சாவடிகளோ அமைக்கப்படவில்லை.

தேவையேற்படும்போது இவை தற்காலிகமாக அமைக்கப்பட்டு சோதனை முடிந்தவுடன் அகற்றப்பட்டு விடுகின்றன.

- இவ்வாறு அமைச்சர் கூறினார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் பிரதிப் பொலீஸ்மா அதிபர்களான போதி லியனகே, காமினி ரந்தெனிய, சிறிசேன ஹேரத் ஆகியோரும் கலந்துகொண்டு தத்தமது பிரிவில் மேற்கொள்ளப்பட்டுவரும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கமளித்தனர்.

## மட்டு.ஆயர் தலைமையில் நாளை மடுமாதா திருவிழா



கிளிநொச்சி,ஜூலை1

மடு அன்னையின் ஆடிமாத வருடாந்த திருவிழாவின் திருச்சொரூப பவனி நாளை புதன்கிழமை காலை நடைபெறவுள்ளது.

கடந்த மாதம் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான ஆலயத்திருவிழாவுக்கு தினமும் நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் வருகை தருவதாக ஆலய பரிபாலகர் தெரிவித்துள்ளார்.

இன்று மாலை நற்கருணை ஆராதனையும், பவனியும் இடம்பெறும். நாளை காலை திருமலை - மட்டுநகர் ஆயர் அதி வணக்கத்துக்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையில் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். மன்னார் ஆயர் அதிவணக்கத்துக்குரிய இராயப்பு யோசப்பும் திருப்பலியில் கலந்துகொள்வார்.

திருப்பலியில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்தும் 10 இற்கு மேற்பட்ட அருட்தந்தையர்கள் மடுவுக்குப் பயணமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்திருவிழாவில் கலந்துகொள்ளும் பக்தர்களின் நலன் கருதி விசேட போக்குவரத்து மற்றும் குடிதண்ணீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக ஆலயப் பரிபாலகர் அறிவித்துள்ளார். (எ-8-ரி)

## சிறுவனைக் கடத்தி பாலியல் துன்புறுத்தல்

### சங்கானையில் சம்பவம்

ஆலயத்தில் நின்றுகொண்டிருந்த சிறுவன் கடத்திச்செல்லப்பட்டு பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளான். இது தொடர்பாக இளைஞர் ஒருவர் தேடப்பட்டு வருகிறார்.

சங்கானை, காளிகோயிலடியைச் சேர்ந்த பத்து வயதுச் சிறுவன் ஒருவனே நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் கடத்தப்பட்டு துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளான்.

தனது வீட்டிற்கு அருகில் உள்ள ஆலயத் திருவிழாவிற்கு பெற்றோருடன் சென்ற மேற்படி சிறுவன் ஆலய வீதியில் ஏனைய சிறுவர்களுடன் விளையாடிக்கொண்டிருந்தபோது சுமார் 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் அங்கு வந்து சிறுவர்களுக்கு குளிர்பானம் வாங்கிக் கொடுத்துள்ளார்.

பின்னர் அந்த இளைஞர் பிரஸ்தாப சிறுவனை மட்டும் விளையாட்டுப் பொருள்கள் வாங்கித் தருவதாகக் கூறி தனியாக அழைத்துச்சென்று வயல் வெளி ஒன்றில் வைத்து சிறுவனை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தியுள்ளார்.

நீண்டநேரமாகியும் சிறுவனைக் காணாத பெற்றோர் ஊர் மக்களுடன் சேர்ந்து பல்வேறு இடங்களிலும் தேடியபோதும் சிறுவனைக் காணவில்லை.

நேற்று அதிகாலை 4 மணியளவில் குறிப்பிட்ட ஆலயத்துக்கு சற்றுத் தொலைவில் சனநடமாட்டம் அற்ற பகுதியில் அந்தச் சிறுவன் அழுதுகொண்டு நின்றவேளை அப்பகுதி வழியே சென்றவர்கள் சிறுவனை வீட்டுக்கு அழைத்துச்சென்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-4-29)

## யாத்திரிகர் மடத்துக்கு அடிக்கல் நடும் விழா

சுமார் 50லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய யாத்திரிகர் மடத்துக்கான அடிக்கல் நடும் விழா நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மேற்படி ஆலய தேவஸ்தானத் தலைவர் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அடிக்கல்லை நட்டு வைக்கவுள்ளார். (ஒ-9-86)

## நாடாளுமன்ற பாதுகாப்பை மேலும் பலப்படுத்த ஏற்பாடு

நாடாளுமன்றத்தின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்த சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா நடவடிக்கை எடுக்கவிருக்கிறார்.

பாதுகாப்பு மேலும் பலப்படுத்துவது குறித்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும்படி நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் திருமதி பிரியானி விஜேசேகரவிடம் சபாநாயகர் அறிவித்திருக்கிறார்.

எதிர்கட்சி உறுப்பினர் அண்மையில் நாடாளுமன்றத்துக்குள் சவப்பெட்டி ஒன்றையும் அதற்கு முன்னர் மலர்வளையம் ஒன்றையும் எடுத்துச் சென்ற சம்பவங்களை கவனத்தில் கொண்டே சபையின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்த சபாநாயகர் நடவடிக்கை எடுக்கவிருக்கிறார்.

## யாழ்கல்வியியற் கல்லூரியின் ஆண்டு நிறைவு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை1

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நாளை 02ஆம் திகதியும் எதிர்வரும் 4ஆம், 7ஆம், 9ஆம், 10ஆம் திகதிகளிலும் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் மண்ணின் கல்விவளர்ச்சிக்கும், பண்பாட்டு எழுச்சிக்கும் உழைத்தவர்கள் நினைவாக நினைவுப்பேருரைகள் மற்றும் மண்ணுக்குத் தொண்டாற்றுபவர்களைக் கௌரவிக்கும் சான்றோர் கௌரவிப்பு ஆகியனவும் இடம்பெறவுள்ளன.

இதில் நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரை இடம்பெறவுள்ளது. நினைவுப்பேருரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி இ.விசாகரூபன் நிகழ்த்துவார்.

எதிர்வரும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30மணிக்கு பேராசிரியர் ப.சந்திரசேகரம் நினைவுப் பேருரை இடம்பெறவுள்ளது. நினைவுப் பேருரையை யாழ்.பல்கலைக்கழக கல்வித்துறைத் தலைவர் பேராசிரியர் சபா.ஜெயராசா நிகழ்த்துவார்.

எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4.30மணிக்கு பேராசிரியர் க.கைலாசபதி நினைவுப் பேருரை இடம்பெறும். நினைவுப்பேருரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி என்.சிவலிங்கராஜா நிகழ்த்தவுள்ளார்.

எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு பேராசிரியர் அ.துரைராஜா நினைவுப் பேருரை இடம்பெறும். நினைவுப்பேருரையை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி பா.தனபாலன் நிகழ்த்துவார்.

எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4.30மணிக்கு செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி சமூகத்தினால் கௌரவிக்கப்படுவார். (எ-10)

## உவர் மணல் விற்பனை குறித்து எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை1

கட்டட வேலைகளுக்கு பயன்படுத்த முடியாத தரமற்ற உவர் மணலை சிலர் வலிகாமம் பகுதியில் தரமான மணல் எனக் கூறி விற்றுவருவதாகவும் - ஆகவே அந்த மணலை கொள்வனவு செய்து பாதிப்படைய வேண்டாமெனவும் -

மட்டுவில் சந்திரபுரம் பிரதேச விவசாய சம்மேளனம் கோரியுள்ளது.

மட்டுவில் சந்திரபுரம் உப்புத் தரவையில் இருந்து இரவு வேளைகளில் - சட்டவிரோதமாக - இம்மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டு விற்பனைக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் சம்மேளனம் தெரிவித்துள்ளது. (ஒ-9)

### படையினரை வெளியேறும்படி மக்கள் வலியுறுத்த

## இராணுவத்தினரின் பாதுகாப்புடனேயே ஆனந்தசங்கரி யாழ். வரவேண்டியுள்ளது!

### இந்த நிலை என் என ஸ்ரீகாந்தா கேள்வி

யாழ்ப்பாணம்,ஜூலை1

வடபகுதியை விட்டு படையினரை வெளியேறுமாறு தமிழ் மக்கள் வலியுறுத்தி வருகின்றனர். அதே இராணுவத்தினரின் பாதுகாப்பிலேயே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரான வீ. ஆனந்தசங்கரி யாழ்ப்பாணம் வந்து செல்கிறார். இந்த நிலை ஏன்? இவ்வாறு கேள்வி எழுப்பினார் ரெலோ அமைப்பின் முதல்வர் என்.ஸ்ரீகாந்தா.

நேற்று யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள கட்சியின் அலுவலகத்தில் செய்தியாளர் சந்திப்பொன்று இடம்பெற்றது. அப்போது செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே ரெலோ முதல்வர் இவ்வாறு பதில் கேள்வி எழுப்பினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்க் கூட்டமைப்பின் தலைவரான வீ.ஆனந்தசங்கரி தெரிவிக்கும் கருத்துக்கள் அண்மைக்காலமாக முரண்பாடுகள் நிறைந்தனவாக உள்ளன. அவரது கருத்துக்கள் விளக்கமில்லாதவை. தேர்தல் காலத்தில் புலிகளே தமிழரின் ஏகபிரதிநிதிகள் என தனது கட்சி அங்கத்தவர்களுடன் இணைந்து மேடைகளில் முழங்கினார். ஆனால், இப்போது தான் அப்படிச் சொல்லவில்லை எனக் கூறி வருகின்றார்.



புலிகளே தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை இன்று உலகமெங்கும் பொங்கு தமிழ் நிகழ்வு மூலம் தமிழ்மக்கள் பறைசாற்றியுள்ளார்கள். எவரும் அதனை மறுத்துரைக்க முடியாது. வீதிகளில் சாகசம் காட்டும் படையினர் எமது மக்களின் உணர்வுகளை அடக்கிவிட முடியாது. நசுங்கிப்போவதற்கும் நசுக்கப்படுவதற்கும் தமிழ் மக்கள் அடிமைகள் அல்லர்.

இராணுவத்தினர் யாழ்ப்பாண வீதிகளில் கலகமடக்குவதுபோல் பாவனைசெய்து பயிற்சி பெறுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. யாழ். மக்களின் பொங்கு தமிழ் எழுச்சியைக் கண்டு அச்சமடைந்த இராணுவத்தினர் தமிழ் மக்களின் மனங்களில் அச்சத்தை ஏற்படுத்தும் நோக்கோடு மேற்கொள்ளும் ஒரு நடவடிக்கையே இதுவாகும். இத்தகைய நடவடிக்கைகளுக்கெல்லாம் எமது மக்கள் அஞ்சமாட்டார்கள்.

உலக நாடுகளில் இராணுவத்[illegible] பயிற்சிகள் மற்றும் செயற்பாடு[illegible] இரகசியமாகப் பாதுகாக்கப்படு[illegible] அங்கெல்லாம் சுதந்திரதின விழ[illegible] நாட்டின் பிதாமகர்களின் நினைவுநாள் கொண்டாட்டங்கள் போன்றவற்றி[illegible]லேயே இராணுவ சாகசங்கள் மக்கள் முன் இடம்பெறும். மக்கள் மத்தியில் எந்தப் பயிற்சியையும் படையினர் மேற்கொள்ளமாட்டார்கள். இந்த வரையறையை மீறி இலங்கை இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில செயற்படுவது மனவேதனைக்குரியவிடயமாகும்.

- இவ்வாறு ஸ்ரீகாந்தா தெரிவித்தார். (ஒ-9-12)

## குட்டிக் குழந்தை!

அமெரிக்காவில் பிறந்த உலகின் மிகச் சிறிய குழந்தை பற்றிய தகவல் இது.

டெக்ஸாஸ் மாநிலத்தில் ஜெசிக்கா பிறஸிர் பிறந்தாள். பிறக்கவேண்டிய தினத்துக்கு 14 வாரங்களுக்கு முன்பாகவே அவள் பிறந்துவிட்டாள் பிறக்குமபோது அவள வெறும 11 அவுன் ஸுக்கும் சற்றுக் குறைவான நிறையிலேயே இருந்தாள்.

எனவே அவள் உயிர் பிழைக்க மாட்டாள் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். எனினும் வைத்தியர்களினதும் தாதிமார்களதும் கடும் முயற்சியின் பயனாக அவள் தற்போது தனது இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றாள்.

கர்ப்பம் தரித்து 18 வாரங்களுக்குப் பின்னரே தான் அது குறித்த பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்ததாக ஜெஸிக்காவின் தாயார் கிரிஸ்ரைன்



தெரிவிக்கிறார். தொடர்ந்து மேற்கொண்ட மருத்துவ பரிசோதனைகளில் குழந்தை முறைப்படி வளர்வதாகத் தெரியவில்லை என்று அவருக்கு கூறப்பட்டது. இதனால், 'ஹெபரின்' என்ற ஊசி மருந்தை ஏற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. ஆனாலும் குழந்தை ஆரோக்கியமாக வளரும் என்ற நம்பிக்கை மருத்துவர்களுக்கு இல்லை.

எனினும் அந்த மருந்தின் பின்னர் சிறிது முன்னேற்றம் தெரிந்தது. மூன்று இறாத்தல் நிறை அதிகரிப்பு குழந்தையில் தெரிந்தது. 26 வாரத்தில் குழந்தைக்கு போதிய போஷாக்கு இல்லை என்பதனால் சத்திர சிகிச்சை மூலம் அதனை வெளியே எடுக்க மருத்துவர்கள் தீர்மானித்தனர்.

பிறக்கும்போது ஜெஸிக்கா வெறும 11அவுன்ஸுக்கும் குறைவான நிறையிலேயே இருந்தாள் மருத்துவர்களுக்கு அவள் உயிர் வாழ்வாள் என்ற நம்பிக்கை இல்லாதிருந்தது. ஆனால், பெற்றோருக்கு அந்த நம்பிக்கை இருந்தது.

மருத்துவர்களினதும் தாதியர்களதும் கடும் உழைப்பின் பயனாக ஜெசிக்கா இப்போது ஆரோக்கியமாக உள்ளாள். அவளின் வயதுள்ள ஏனைய குழந்தைகளை விடவும் அவள் சிறியவளாக இருந்தாலும் குறைபாடுகள் தொடர்ந்தாலும், உயிர் வாழ்வாள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் அளவுக்கு அவள் தேறிவிட்டாள். (ம)

# லைபீரியாவுக்கு அமைதிப் படை: மே.ஆபிரிக்க நாடுகள் கோரிக்கை

மொன்ரோவியா,ஜூலை1

லைபீரியாவின் தலைநகர் மொன்ரோவியாவில் கிளர்ச்சியாளர்களுக்கும் அரச படையினருக்கும் இடையில் சண்டைகள் தொடர்ந்து வருவதால் ஐ.நா. அமைதிப்படையை அங்கு அனுப்பும்படி மேற்கு ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் ஐ.நாவிடம் கோரியுள்ளனர்.

ஞாயிறன்று நைஜீரியாவில் நடந்த ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தூதுவர்கள், மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டத்தில் இந்த விடயம் முக்கியமாக ஆராயப்பட்டது. அக்கூட்டத்திலேயே ஐ.நா. அமைதிப் படையை லைபீரியாவுக்கு அனுப்பவேண்டும் என்று மேற்கு ஆபிரிக்க நாடுகள் தமது கருத்தை ஆணித்தரமாகத் தெரிவித்தன.

இந்தக் கூட்டம் நடைபெற்ற ஒரு நாளின் பின்னர், லைபீரியாவுக்கு அமைதிப் படையை அனுப்புவது குறித்து ஐ.நா. பொதுச் செயலர் கோபிஅனான் பாதுகாப்புச் சபையிடம் ஆலோசனை கேட்டுள்ளார். அமைதிப் படைக்கு அமெரிக்கா தலைமை தாங்கவேண்டும் என்று லைபீரிய மக்களில் பலரும் மேற்காபிரிக்க நாடுகளும் எதிர்பார்க்க[illegible]ன.

லைபீரிய அரசுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட தற்காலிகப் போர்நிறுத்தம் முறிவடைந்த பின்னர் கடந்த ஒரு வார காலத்தில் 500 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். போர் தொடர்வதனால் தலைநகரில் கொள்ளைச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. அரச படையினரும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. அவ்வாறான சம்பவங்களில் அரச படையினர் ஈடுபட்டால் அவர்கள் நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என்று அதிபர் சார்ள்ஸ் ரெய்லர் எச்சரிக்கை செய்துள்ளார். (ம)



தமது நாட்டில் நடக்கும் உள்நாட்டுப் போரில் அமெரிக்காவைத் தலையிடக்கோரி லைபீரியத் தலைநகர் மொன்ரோவியாவில் உள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பாக பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 150 வருடங்களுக்கு மேலாக இரு நாடுகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருப்பதால் தமது உள்நாட்டுப் பிரச்சினையில் அமெரிக்கத் தலையீட்டை லைபீரிய மக்கள் பெரிதும் விரும்புகின்றனர்.

# ஈராக்கினுள் சதாமைத் தேடி அமெ. படை தீவிர வேட்டை

பக்தாத்,ஜூலை1

ஈராக்கில் முன்னாள் ஆட்சியாளர் சதாம் ஹுசைனையும் அவருக்கு ஆதரவாக இன்னும் செயற்பட்டுவரும் முன்னாள் ஈராக்கியப் படையினரையும் தேடி அழிக்கும் பெரும் நடவடிக்கை ஒன்றை மத்திய ஈராக்கில் அமெரிக்கா ஆரம்பித்துள்ளது.

'ஒப்பரேஷன் சைட்விண்டர்' (ope -ration Sidewinder) என்று அந்த நடவடிக்கைக்குப் பெயரிடப்பட்டுள்ளது. விமானங்கள், கவசவாகனங்கள் உட்பட ஆயிரக்கணக்கான படையினர் இந்தத் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். 20இற்கும் மேற்பட்ட சோதனை நடவடிக்கைகள் நேற்று நடத்தப்பட்டன. தலைநகர் பக்தாத்துக்கு வடக்கே ரைக்ரிஸ் ஆற்றை அண்மித்த பகுதிகளில் இந்தத் தேடுதல்கள் நடத்தப்படுகின்றன.

தேடுதல் நடவடிக்கையில் சட்ட விரோதமாக ஆயுதங்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 60க்கும் மேற்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக நேற்று அமெரிக்கப் படையினர் தெரிவித்தனர். ஈராக்கிய முன்னாள் இராணுவத்தின் தொடர்பான ஆவணங்கள் பலவற்றையும் தாம் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே நடத்தப்பட்ட இத்தகைய 'பாலைவனத் தேள்' நடவடிக்கையில் பெரும் வெற்றி எதுவும் கிடைக்காததனால் தற்போதைய நடவடிக்கை எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும் என்பதில் சந்தேகங்கள் தெரிவிக்கப்படுகிறது.

உலக அரங்கில்

# 'பல்கனி' நொறுங்கி 12 பேர் உயிரிழப்பு!

அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் தொடர்மாடிக் கட்டடம் ஒன்றின் இரண்டாவது மாடியில் இருந்த 'பல்கனி', விருந்து நடந்துகொண்டிருந்த சமயம் நொறுங்கி வீழ்ந்ததில் 12 போ உயிரிழந்தனர். மேலும் 30 பேர் காயமடைந்தனர்.

விருந்தில் அளவுக்கதிகமானோர் கலந்து கொண்டதனால், பல்கனி பாரம் தாங்காமல் நொறுங்கி வீழ்ந்துவட்டது என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

நொறுங்கி வீழ்ந்த 'பல்கனி'யின் இடிபாடுகளுக்குள் சிக்கியதிலேயே அதிகளவானவர்கள் உயிரிழந்தனர். 11 பேர் அந்த இடத்திலேயே பலியாகினர். மற்றொருவர் வைத்தியசாலைககு எடுத்துச் செல்லப்பட்டபின்னர் மரணமானார். 'பல்கனி' நொறுங்கி வீழ்ந்த சமயம் அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த விருந்தில் 40 முதல் 50 வரையானோர் கலந்துகொண்டிருந்தனர்.

# பாலித்தீவு குண்டுவெடிப்பு; முக்கிய சூத்திரதாரி கைது!

ஜகார்த்தா,ஜூலை1

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் உலகை உலுக்கிய இந்தோனேஷியாவின் பாலித்தீவில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரைத் தாம் கைதுசெய்துள்ளதாக இந்தோனேஷியாவின் மூத்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த மாதம் 12ஆம் திகதி வடக்கு சுமத்திராவின் தலைநகரான மெடெனில் இவர் கைது செய்யப்பட்டதாக இந்தோனேஷியாவின் துப்பறியும் பிரிவுத் தலைவர் எர்வின் மப்பாஸெங் தெரிவித்தார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் இட்றிஸ் என்று அழைக்கப்படுகின்றார்.

அவர் கைதுசெய்யப்பட்டமை குறித்து இத்தனை நாள் கடந்த நிலையில் ஏன் அறிவிப்பு வெளியிடப்பட்டது என்பது குறித்து உடனடியாக எந்தக் காரணமும் தெரிவிக்கப்படவில்லை.

ஒக்ரோபரில் நடந்த குண்டுவெடிபபுச் சம்பவத்தில் 202 பேர் உயிரிழந்திருந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள். இந்தக் குண்டு வெடிப்புக்குத் திட்டமிட்ட முக்கிய சூத்திரதாரிகள் ஐவரில் இட்றிஸ் ஒருவர் என்று பொலீஸ் உயரதிகாரி தெரிவித்தார்.

இந்தக் குண்டுவெடிப்புத் தொடர்பாக ஏற்கனவே 30 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஜமாத் இஸ்லாமிக் என்ற கடும்போக்கு மதக் குழுவே இந்தத் தாக்குதலுக்கு காரணம் என்று இந்தோனேஷிய அரசு கூறுகின்றது. அந்த அமைப்பின் தலைவரும் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். (ம)

## மத்தியகிழக்கு சமாதான முயற்சிகளில் முன்னேற்றம்

# வடகாஸா பகுதியில் இருந்து இஸ்ரேல் படை வெளியேறியது

ஜெருசலேம்,ஜூலை1

மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளில் மற்றொரு முன்னேற்றகரமான நகர்வு இடம்பெற்றுள்ளது. பலஸ்தீன ஆயுதக் குழுக்கள் தற்காலிகப் போர் நிறுத்தம் ஒன்றை அறிவித்ததைத் தொடர்ந்து, காஸாவின் வடக்குப் பகுதியில் உள்ள பலஸ்தீனக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து இஸ்ரேலியப் படைகள் வெளியேறியுள்ளன. அந்தப் பகுதிகளின் கட்டுப்பாட்டை பலஸ்தீனப் பொலீஸார் பொறுப்பேற்றுள்ளனர்.

இந்த நடவடிக்கைகளால் அமெரிக்கப் பின்னணியுடனான சமாதான முயற்சிகள் மீண்டும் உற்சாகம் பெற்றுள்ளன.

காஸாவின் வடபகுதியான பிற் ஹனூன் என்ற பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை விட்டு இஸ்ரேலியப் படைகள் வெளியேறியுள்ளன. பலஸ்தீன ஆயுதக் குழுக்கள் இஸ்ரேலியப் பகுதிக்குள் நுழைந்து தாக்குதல்களை நடத்துவதைத் தடுக்கும் நோக்குடன் இந்தப் பகுதியை இஸ்ரேலியப் படையினர் தமது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்தனர்.

ஞாயிறன்று இரவு முதல் இஸ்ரேலியப் படையினரின் வாகனங்கள் முகப்பு வெளிச்சங்களைப் பாய்ச்சியபடி நீண்ட வரிசைகளில் சென்றதைக் காணமுடிந்தது. அவர்கள் வெளியேறியதும் பலஸ்தீனப் பொலீஸார் அங்கு வந்து சேர்ந்தனர். கடந்த மே மாதத்தில் இந்தப் பகுதி ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர் அவர்கள் இங்கு வருகை தருவது இதுவே முதற்றடவை.

நேற்று திங்களன்று பிற் ஹனூன் பகுதியில் பலஸ்தீனப் பொலீஸார் மூன்று சோதனை நிலையங்களை அமைத்து நகருக்குள் வருவது மற்றும் வெளியேறுவதற்கான கட்டுப்பாட்டைப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். இஸ்ரேலியப் படையினர் வெளியேறியதும் தங்களது நகரின் மகுதி, வீதிகள், பாலங்கள் என்பவற்றைத் துப்புரவு செய்யும் பணிகளை காஸா மக்கள் ஆரம்பித்துள்ளனர்.



பிற் ஹனூனில் இருந்து இஸ்ரேலியப் படை வெளியேறியதும் பலஸ்தீனப் பொலீஸார் சோதனை நிலையங்களை அமைத்து தமது தேசியக் கொடிகளைப் பறக்கவிட்டனர்.

### ஆயுதக் குழுக்கள் போர்நிறுத்தம

முன்னதாக, மத்தியகிழக்கு சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைக்கும் நோக்குடன் பலஸ்தீன தீவிரவாத அமைப்புக்களான ஹமாஸ், இஸ்லாமிய ஜிகாத் ஆகியன தற்காலிகப் போர் நிறுத்தம் ஒன்றை அறிவித்தன. இஸ்ரேலுக்கு எதிரான தற்கொலைத் தாக்குதல்கள் உட்பட அனைத்துத் தாக்குதல்களையும் தாம் நிறுத்துவதாக ஞாயிறன்று அவர்கள் அறிவித்தனர்.

இந்த தற்காலிகப் போர் நிறுத்தத்தில் தாமும் இணைந்து கொள்வதாக யஸீர் அரபாத்தின் பாத் கட்சியும் நேற்றுத் தெரிவித்தது. ஆயுதக் குழுக்களின் இந்த போர்நிறுத்தத்தின் மூலம், கடந்த 33 மாதங்களாகத் தொடரும் மத்தியகிழக்கு வன்முறைகள் ஒரு முடிவுக்கு வரும் என்ற நம்பிக்கை அதிகரித்திருப்பதாக ஜெருசலேமில் உள்ள செய்தியாளர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொன்டோலிஸா ரைட்ஸ் கடந்த வாரஇறுதி நாள்களை இஸ்ரேலிய மற்றும் பலஸ்தீன தலைவர்களுடனான பேச்சுக்களில் செலவழித்ததன் பயனாக அமைதி முயற்சிகளில் இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சந்திப்பின்போது சமாதானத்துக்கான வழிகாட்டு வரைபடத்தில் (Road map) கூறப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துமாறு இரு தரப்புக்களையும் ரைட்ஸ் வலியுறுத்தியிருந்தார்.


### நிபந்தனை

ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிகாத் ஆகியன இணைந்து அறிவித்துள்ள தற்காலிகப் போர் நிறுத்த அறிவிப்பில் பல நிபந்தனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இஸ்ரேலியப் படையினர் பலஸ்தீனப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது, பலஸ்தீன ஆயுததாரிகளைக் கொல்லக் கூடாது, பலஸ்தீனர்களின் வீடுகளை இடித்தழிக்கக்கூடாது என்பன போன்ற நிபந்தனைகள் அவற்றில் முக்கியமானவை. தமது தற்காலிகப் போர் நிறுத்தம் மூன்று மாத காலத்துக்கு நீடிக்கும் என்றும் அந்த அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

பலஸ்தீன ஆயுதக் குழுக்களில் முக்கியமான மற்றொரு அமைப்பான அல்-அக்ஸா மார்ட்டியார்ஸ் பிரிகேட் இந்த தற்காலிகப் போர் நிறுத்தத்தில் இணைந்துகொள்ளவில்லை. எனினும், முக்கிய அமைப்புக்களின் போர் நிறுத்த அறிவிப்பு வெளியானதன் பின்னர் ஒரு வன்முறைச் சம்பவம் மட்டுமே இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

உ
சிவமயம்
ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ!

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தவப்பேறு
1925
-
03
-
27

சிவப்பேறு
2003
-
06
-
01

# அமரர் சபாபதிப்பிள்ளை தங்கராசா பத்தர்

## உரிமையாளர்: தங்கராசா நகை மாளிகை

சந்தைவீதி,
உடுப்பிட்டி.

*திதி:பூர்வபக்க துதியை*

கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

## பொன்னுலகம் புகுந்தனையோ?

வல்லைவா ழிப்பிள்ளை யார்க்காம் மஹோற்சவ
மாபெரும் கைங்கர்யம் பலவும் இயற்றி நின்றோய்
பல்குபெருஞ் செல்வம் பலவுமே தார்மீகப்
பணிகட் குதவியஎம் பாசபிதா மறைந்தனையோ?

அருள்மிகு சிட்டிபுரக் கண்ணகை அம்பாள்
ஆலயத் திருப்பணிகட் கனவரதம் வழங்கி நின்றோய்
சருவ பொழுதினிலும் தயாளகுணம் நிறைந்த
தன்நேர் இல்லாத் தந்தையே மறைந்தனையோ?

சந்நிதியான் ஆச்சிரமம், பரமானந் தாச்சிரமம்
சார்கைங் கர்யப் பணிகட் குதவிநின்றோய்
பொன்பொருளை நாளெல்லாம் புகழ்ப்பணிகட்கீந்தோயே!
போற்றிபெறும் எந்தையே பொன்னுலகம் புகுந்தனையோ?

எமது அன்புக்குரிய குடும்பத் தலைவர் அவர்களின் திடீர் மறைவுச்செய்தி கேட்டு எங்கள் இல்லம் நாடி ஓடோடி வந்து எமக்கு ஆறுதலும் தேறுதலும் கூறிய அன்புள்ளங்களுக்கும் இறுதிக்கிரியைகளின்போது சகல வழிகளிலும் எமது துயரத்தில் பங்கேற்று உதவி ஒத்தாசைகள் புரிந்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தந்தி, தபால், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*சந்தை வீதி,*
*உடுப்பிட்டி.*

(C-28660) (14-)

*தங்கள் பிரிவால் துயரில் மூழ்கியுள்ள:*
பிள்ளைகள், குடும்பத்தினர்

உதயன்

# மாமனிதர் குமாரின் குரல்

தமிழின விரோதிகளும் பேரினவாத சக்திகளும் இணைந்து படுகொலை செய்த மாமனிதர் குமார் பொன்னம்பலம் இன்று உயிரோடு இருந்தால் அவர் தன்னுடைய மகன் கஜேந்திரகுமார் பற்றி மிகவும் பெருமை அடைந்திருப்பார்.

தமக்கு எட்டாக்கனியாக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் தனது மகன் எட்டிப் பிடித்து விட்டார் என்பதற்காக அல்ல. தம்மைப் போலவே தமது மகனும் தமிழினத்தின் விடுதலையிலும் அவர்களின் உரிமை வாழ்விலும் பெரும் அக்கறை கொண்டு தமிழினத்தின் சேவைக்கே தம்மை அர்ப்பணித்து நிற்கிறார் என்பதைக் கண்டு புளகாங்கிதம் அடைந்திருப்பார்.

குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்டு விட்டாலும் அவருடைய ஆத்மா தமிழினத்தையே சுற்றிக்கொண்டு இருக்கும்.

தமிழ் மக்கள் சுதந்திர புருஷர்களாக, தன்மானம் மிக்கவர்களாக தலைநிமிர்ந்து உரிமைகளுடன் வாழ வேண்டும். அதற்கு அவர்களுக்கு சுயாட்சி வேண்டும். அதாவது, அவர்கள் தம்மைத்தாமே ஆள வேண்டும் என்று விரும்பியவர் குமார் பொன்னம்பலம்.

அப்படியான ஒரு நிலையைத் தமிழினம் எய்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தேர்ந்தெடுத்துள்ள பாதையே சிறந்ததும் சரியானதும் என்று மனதார ஒப்புக்கொண்டவர் குமார் பொன்னம்பலம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டிருந்த காலத்திலேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கைகளையும் திட்டங்களையும் தாம் ஆதரிப்பதாகத் தென்னிலங்கையில் சிங்களப் பேரினவாதிகள் மத்தியிலேயே துணிந்து கூறியவர் குமார் பொன்னம்பலம்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தையே துச்சமென எண்ணித் தமது கொள்கைகளை நாடெங்கும் பிரசாரம் செய்து வந்தவர் அவர்.

அவரது அரசியல் அறிவுத் திறமையையும், நெஞ்சுத் துணிவையும், கொள்கைப்பற்றையும், இலட்சிய வேட்கையையும், தமிழினத்துக்கு அவர் ஆற்றி வந்த சேவையையும் மதித்தே தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் 'மாமனிதர்' பட்டத்தைச் சூட்டிக் குமார் பொன்னம்பலத்தைப் பாராட்டிக் கௌரவித்தார்.

பிரபாகரனின் பட்டத்தையும் பாராட்டையும் நேரில் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு குமார் பொன்னம்பலத்துக்குக் கிடைக்கவில்லை. தமிழின விரோத சக்திகளும் பேரினவாதிகளும் முந்திவிட்டார்கள்.

குமார் பொன்னம்பலத்துக்குக் கிடைத்த பெரியபேறு தாம் இல்லாவிட்டாலும் தமிழினத்துக்குத் தமது சேவையைத் தொடர்ந்து செய்வதற்கு தமக்கு ஒரு வாரிசு (மகன்) கிடைத்ததாகும்.

இப்படியான பேறு குமார் பொன்னம்பலத்தைப் பெற்றதால் அவருடைய தந்தை ஜீ.ஜீ.பொன்னம்பலத்தைத் தவிர வேறு தமிழ்த் தலைவர்கள் எவருக்கும் கிடைக்கவில்லை.

தமிழரசுத் தந்தை எஸ்.ஜே.வீ.செல்வநாயகத்தின் மகன் சந்திரகாசனில் பலரும் நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஆனால், அவர் அசல் அரசியலிலிருந்து ஒதுங்கி இந்தியாவில் புனர்வாழ்வு விடயங்களோடு தம்மைப் பிணைத்துக் கொண்டு வாழ்க்கையை நடத்திவருகிறார்.

முன்னாள் அமைச்சர் திருச்செல்வத்தின் மகன் நீலன், தனது சட்ட அறிவு, ஆற்றல் அனைத்தையும் பிற நாடுகளுக்கும் இங்கே பதவிக்கு வந்த அரசுகளுக்கும் அபரிமிதமாகப் பயன்படுத்தினார். தந்தை வழியில் அவரால் செல்ல முடியவில்லை.

அ.அமிர்தலிங்கத்தின் வாரிசுகள் வெளிநாடுகளில் தம்பாட்டில் இருக்கிறார்கள்.

இவர்களுக்கு எல்லாம் எதிர்மாறாக கஜேந்திரகுமார் தந்தை வழியில் அரசியல் பணியில் ஈடுபட்டிருக்கிறார்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடந்த பொங்குதமிழ் நிகழ்வில் கஜேந்திரகுமார் உரை நிகழ்த்துகையில் எடுத்த எடுப்பில் விடுதலைப் புலிகளின் கரங்களைப் பலப்படுத்துவது தன்மானமுள்ள ஒவ்வொருவரினதும் கடமை என்று முழங்கினார்.

கடந்த 50 வருடங்களா ஏமாற்றப்பட்டு வந்த தமிழ்த் தேசிய இனம் இப்பொழுது ஏமாற்றப்பட முடியாத பலம்மிக்க தமிழ்த் தலைமைத்துவத்தின் கீழ் உள்ளது.

தமிழர் தாயகத்தின் இயல்பு நிலையை உருவாக்கவும் யுத்தத்தினால் சின்னாபின்னமாகிப் போய்விட்ட தமிழீழ பொருளாதார வளங்களை மீளமைப்புச் செய்யவும் அரசியல், நீதி, நிர்வாக விடயங்களைக் கவனிக்கவும் அதிகார பலமுள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தமிழர் தாயகத்துக்கு வழங்கப்பட வேண்டும். அது தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுப்பில் இருக்க வேண்டும். இடைக்கால நிர்வாகம் இறுதி இலட்சியத்துக்கு முன்னோடியாக அமைய வேண்டும்.

விடுதலைப் புலிகளின் பலம்தான் தமிழர் தரப்பின் பேச்சுவார்த்தைக்கான பலம். இந்த உண்மையை இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறேன் என்றும் பொங்கு தமிழ் நிகழ்வில் கர்ஜித்தார் கஜேந்திரகுமார்.

அவருடைய வாயிலிருந்து குமார் பொன்னம்பலத்தின் குரலே ஒலித்தது என்ற உணர்வு பேச்சைக் கேட்ட அனைவருக்கும் ஏற்பட்டது.

இந்தப் பெருமையைக் கஜேந்திரகுமார் கடைசி வரை காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.

அதனால், அவருக்கு மட்டுமன்றி குமார் பொன்னம்பலத்துக்கும் பெருமை; தமிழினத்துக்கு நல்,மை.

# மனைவியை காதலனுடன் சேர்த்து வைத்த கணவன்!

சீனன்குடா,ஜூலை1

அயல்வீட்டு வாலிபனுடன் தனது மனைவிக்கு காதல் தொடர்பு இருப்பதை அறிந்த கணவன் அவர்கள் இருவரையும் ஒன்று சேர்த்து வைத்தார்.

இச்சம்பவம் கந்தளாய் பொலீஸ் பகுதியில் இடம்பெற்றிருக்கிறது.

மனைவி, இருபிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக குடும்பம் நடத்தி வந்தார் விவசாயி. தனது மனைவிக்கும் பக்கத்து வீட்டு வாலிபனுக்குமிடையில் காதல் உறவு இருப்பதைத் தெரிந்துகொண்டவர் மனைவிக்கு புத்திமதிகள் கூறினார். ஆனால், அவளது காதில் புத்திமதிகள் ஏறவில்லை.

இதனையடுத்து கணவன் இது பற்றி கந்தளாய் பொலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். கணவனையும், மனைவியையும், காதலனையும், இரு பிள்ளைகளையும் பொலீஸ் நிலையம் அழைத்த கந்தளாய் பொலீஸ் இன்ஸ்பெக்டர் வீரசேன, விசாரணைகளை மேற்கொண்டார்.

விசாரணையின்போது காதலனுடன் செல்வேன் என்று வற்புறுத்திய மனைவியிடம் நீ விரும்புவது போல் உன்னைத் தாரைவார்த்துக்கொடுக்க நான் மனப்பூர்வமாக சம்மதிக்கிறேன். ஆனால், எனக்கு செய்த துரோகத்தைப் போல் உனது காதலனுக்கும் துரோகம் செய்து விடாதே என்று அறிவுரை கூறிப் பிரிந்து சென்றார் கணவர்.

காதலன் காதலியை அழைத்துக்கொண்டு செல்ல கணவன் தனது இரு பிள்ளைகளையும் அரவணைத்தபடி வீடுசென்றார்.(எ)

## நாட்டு நடப்பு

### குடும்ப இலட்சணம் மாறுவதேன்!

கோபுரம் போல் உயர்ந்த வீடு
கோடி பொன் சொத்துப் பத்து
மாபெரும் பதவி பட்டம்
மதிக்கொணா பெரிய மோட்டார்
ஊரெல்லாம் சிரிக்கும் வண்ணம்
உள்வீட்டில் நிதமும் யுத்தம்
தீராத பகை வளர நாளும்
திரிகிறார் விவாகரத்துக் கோரி

சேரியில் அடுத்த வீட்டில்
சிறியதோர் குடிசை தன்னில்
ஆருயிர் இரண்டு மொன்றாய்
அளப்பெரும் வறுமை சூழ
சீர்பெறு குடும்ப மொன்றாய்
சிறப்புற வாழ்கின்றாரே!

ஊரறிய இவர்கட்கு ஈடாய்
உவமைக்கோர் குடும்பம் இல்லை
பேரதில் பதவி, பட்டம்
பெற்றென்ன கண்டீர் மிச்சம்?

- விகடகவி.

# சகல இனங்களுக்கும் சம அந்தஸ்து நிரந்தர சமாதானம் மூலம் கிட்டும்

## ஒத்துழைப்பு மன்ற இணைப்புச் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை1

இலங்கையில் வாழும் அனைத்து மக்களும் எவ்வித பேதமுமின்றி சம அந்தஸ்து பெற்று வாழும் நிலையிலேயே நிரந்தர சமாதானம் ஏற்படும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் நீதிக்கும் சமாதானத்துக்குமான உலக ஒத்துழைப்பு மன்ற இலங்கைக்குழுவின் இணை அமைப்புச் செயலாளர் திருமதி தயானகல்ல.

நேற்றுமுன்தினம் மாலை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற சமாதானத்துக்கான பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கும், நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் எமது அமைப்பு இலங்கையிலுள்ள 17 மாவட்டங்களுக்கும் சென்று சமாதானப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றது.

சமாதானம் என்பது யுத்தநிறுத்த உடன்படிக்கையின் மூலமோ புரிந்துணர்வு உடன்படிக்கை மூலமோ ஏற்படுவதல்ல. இந்த நாட்டில் வாழுகின்ற அனைத்து மக்களும் சகல உரிமையுடனும், சுயகௌரவத்துடனும் வாழும்போதே நிரந்தர சமாதானம் ஏற்படும்.

கடந்த 20 வருடகால யுத்தத்தின் மூலம் நாம் இழந்தவை கொஞ்சநஞ்சமல்ல இக்கொடூர யுத்தத்தின் மூலம் குடும்பத் தலைவர்களை - பிள்ளைகளை - சகோதரர்களை இழந்துள்ளோம்.

அதுமட்டுமல்ல, இந்தப் போரின் மூலம் பெருமளவில் எமது பொருளாதார வளம் சிதைக்கப்பட்டுள்ளது. பெரும் தொகைப் பணம் வீண்விரயம் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பொருளாதார வளம் எமது பிள்ளை சிறப்பாக வாழ்வதற்காகவோ அன்றி சுபீட்சமாக வாழ்வதற்காகவோ செலவுசெய்யப்படவில்லை. அது எமது பிள்ளைகளின் எதிர்காலத்தையே அழித்துள்ளது. இந்த நிலைமைகள் இனிமேலும் தொடர அனுமதிக்கக்கூடாது - என்றார். (எ-5)

### விளையாடிய சிறுவர்கள் உட்பட

# ஒரே இடத்தில் நான்கு பேரை கடித்துக் குதறிய விசர்நாய்

## கல்வயல் பகுதியில் சம்பவம்

விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் உட்பட நான்கு பேரை விசர்நாய் கடித்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை கல்வயல் பழைய பாடசாலை வீதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த அ.அனோஜன் (வயது10), ப.சுதன் (வயது10), க.சிவகுமார் (வயது34), பெருங்குளம் சந்தியைச் சேர்ந்த பூ.சுதாமதி (வயது30) ஆகியோரே விசர்நாயினால் கடியுண்டவர்களாவர்.

இவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று விசர்நாய்க்கடி தடுப்பூசி ஏற்றுவதற்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

விசர்நாயினை இரண்டு மைல் தூரம் துரத்திச் சென்று சம்பந்தப்பட்டவர்கள் அடித்துக் கொன்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

### தென்மராட்சியின் சில பகுதிகளில்

# லேகியம் அருந்தும் பழக்கம் மாணவர் மத்தியில் அதிகரிப்பு

## மயங்கிய மாணவன் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி,ஜூலை1

சாவகச்சேரி, கல்வயல் மட்டுவில் பகுதி மாணவர்களிடையே லேகியம் அருந்தும் பழக்கம் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அளவுக்கு அதிகமாக லேகியம் சாப்பிட்ட பாடசாலை மாணவன் மயங்கிய நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

கல்வயலைச் சேர்ந்த இராசகுலசிங்கம் சிவச்செல்வன் (வயது 16) என்னும் மாணவனே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

மேற்படி லேகியம் உடலுக்கு சக்தியை அளிப்பதுடன் பசியின்மையைப் போக்குமென மாணவர்களிடையே பிரசாரம் செய்யப் படுவதையடுத்து மாணவர்கள் கடைகளில் பெருமளவில் இவற்றைக் கொள்வனவு செய்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் போதை ஊட்டும் இவ்வாறான லேகியத்தினை மாணவர்கள் சாப்பிடாமல் பார்த்துக்கொள்ளுமாறு சாவகச்சேரி வைத்தியசாலை பொறுப்பதிகாரி பெற்றோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ-117)

### நாளை

ஆனி 17
புதன்கிழமை
02.07.2003
திதி : திருதிகை
முன்னிரவு 10.59 வரை
நட்சத்திரம் : பூசம்
பிற்பகல் 2.24 வரை
சுபநேரம் : 4.26-5.56
ராகுகாலம் : 11.56-1.26
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

வாழ்ந்து கெட்ட மனிதர்கள் சிலர். பேசிக்கெட்ட மனிதர்களோ பலர்.

# மாம்பழம் சந்தியில் மீண்டும் படைமுகாம்

கொழும்புத்துறை,ஜூலை1

அரியாலை, மாம்பழம் சந்தியில் படையினர் மீண்டும் இராணுவ முகாம் ஒன்றை அமைத்து வருகின்றனர்.

இப்பகுதியில் பாவனையில் இல்லாத தனியாருக்குச் சொந்தமான மேல்மாடி வீடொன்றில் கடந்த வாரம் முதல் இந்த முகாம் அமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

குறிப்பிட்ட வளவைச் சுற்றி முட்கம்பிகள் பொருத்தப்பட்டு காவலரண் அமைத்த படையினர், அங்கு காவல் கடமையில் ஈடுபட்டுள்ளனர். மேல்மாடிப் பகுதியிலும் காவலரண் அமைக்கப்பட்டு வருவதை - அவதானிக்க முடிகிறது.

மாம்பழம் சந்தியில் இருந்த படைமுகாம் புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து கடந்த ஆண்டு அவ்விடத்தில் இருந்து அகற்றப்பட்டது.

இராணுவ ஆக்கிரமிப்பை நிறுத்துமாறு கோரிக்கைகள் எழுந்துள்ள இவ்வேளையில், மீண்டும் படைமுகாம் அமைக்கப்படுவது இப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் விசனத்தையும் அச்சத்தையும் தோற்றுவித்துள்ளதாகக் கூறப்பட்டது. (எ-30)

# கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்கு 'கெயர்', 'போரூட்' நிதியுதவி

கிளிநொச்சி,ஜூலை1

'கெயர்' நிறுவனத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக ஒரு கோடியே 28 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதி கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

போஷாக்கு, சுகாதாரம், நீர் போன்ற விடயங்களுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளதாக இணையத்தின் தலைவர் எஸ். தனபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், 'போரூட்' நிறுவனத்தினாலும் ஒருகோடியே 66 லட்சம் ரூபா நிதி அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியானது பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம், அக்கராயன் அபிவிருத்தி நிறுவனம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம், கிளிநொச்சி அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனம், கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனம் ஆகியவற்றுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு அவற்றின் ஊடாகவே அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (எரி-10)

உ

புன்னாலைக் கட்டுவன் தெற்கு
கருமாரியம்மன் தேவஸ்தான அஷ்ட பந்தன

# மஹாகும்பாபிஷேகம்

கும்பாபிஷேக சுபமுகூர்த்தம் ஆனிமாதம் 18ஆம் நாள் (02.07.2003) புதன்கிழமை காலை 9.30 - 10.30இற்குள் வரும் சிங்கலக்கின பூசநட்சத்திரத்தில் சித்தயோகம் கூடிய சுபநேரத்தில் எம்பிராட்டிக்கு கும்பாபிஷேகம் நடைபெறும். அடியவர்கள் அனைவரும் கலந்து அம்மனின் அருளைப் பெறுவீர்களாக.

மேற்படி கும்பாபிஷேக பிரதமகுரு
சிவஸ்ரீ கிருஷ்ணா ஜோதீஸ்வரக்குருக்கள்
ஊரெழு

கருமாரி அம்மன்
பரிபாலனசபையினர்.

(19640) (21-14-16)

---

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலைகள் செய்வதற்கு அல்லது நாளாந்தம் சென்று வரக் கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் குறிப்பிட்டு உடன் விண்ணப்பிக்கவும்.
விள.இல. 1934,
மே/பா உதயன்.

(19674) (21-26-14-16)

---

## ஆசிரியர் தேவை

சைவசமயம், பேச்சு ஆங்கிலம், சிங்களம் கற்பிக்க ஆசிரியர் உடன் தேவை. நேரில் தொடர்பு கொள்க.
கலைமதி கல்வி நிலையம்.
ஊரெழு.

(21-14-16) (19683)

---

உ

## யஜ்ஞோபவீத தாரண ப்ரம்மோபதேச அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானுவருஷம் ஆனிமாதம் 17ஆம் நாள் (02.07.2003) புதன்கிழமை காலை 11மணி 30 நிமிஷம் முதல் 12மணி 50 நிமிஷம் வரையுள்ள கன்னிலக்கின சுபமுகூர்த்தத்தில் வர்த்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலய அர்ச்சகர் (ஆதீன கர்த்தா) கு.சுப்பிரமணிய ஐயர் கமலாம்பிகை அம்மா அவர்களின் பௌத்திரனும் பிரம்மஸ்ரீ சு.முருகானந்தசர்மா தனலட்சுமி தம்பதிகளின் புத்திரனுமாகிய

சிரஞ்ஜீவி மு. உமாகாந்த சர்மா

அவர்களுக்கு யஜ்ஞோபவீத தாரண பிரம்மோபதேசம் செய்வதற்கு எமது குலதெய்வங்களின் திருவருளும் பெரியோர்களின் ஆசியும் கூடியுள்ளதால் மேற்படி முகூர்த்தம் எமது இல்லத்தில் நிகழவிருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சமேதாராக வருகை தந்து குமாரனை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.7, பிரப்பங்குள வீதி,
யாழ்ப்பாணம்.

பிரம்மஸ்ரீ சு.முருகானந்தசர்மா
தனலட்சுமி

(19659)(21-14-16)

---

உ

மீசாலை வடக்கு
அருள்மிகு இராமாவில் கந்தசுவாமி கோயில்

# மஹாகும்பாபிஷேகம்

அருளினை மழையாய்ப் பொழியும்
இராமாவில் கந்தன்

கலகலப்பு மலிந்த கண்டி வீதியருகினிலே
மீசாலைக் கிராமத்து இராமாவிலிலே
குடிகொண்ட கலியுகத்து வேந்தனே!
ஊர் ஊராய் மட்டுமல்ல; தேசங்களுமாய்
கேட்டு கேட்டு காசுகள் சேர்த்தே
இருபது வருடங்களின் பின்; உனக்குக் குடமுழுக்கு
மாதர்களிலிருந்து முதியோர்கள்...
இளைஞர்களோடு மழலையருமே
ஓடியோடி உனக்குத் தொண்டுகள் செய்து
வண்ணங்கள் குழைத்தே சிற்பங்கள் தீட்டி
எழில்மிகு; சிறு கோட்டை அமைத்துள்ளோம்
இராமாவில் கந்தா! உன்வாசல் வந்தோர்க்கு
அருளினை மழையாய்ப் பொழிகின்றவனே!
அப்பா! நீ ஆடுகின்ற குட முழுக்கில்
ஆடிப்பாடி ஆராதித்து நிற்கிறோம்.
தமிழ்த் தெய்வமே! எல்லோரதும் நிம்மதிக்காய்

மீசாலையூர் கமலா

'தங்கா போட்டோ'
மீசாலை.

(19675) (21-19-14-16)

---

## வரதர் - 80

★ இவ்வுலக வாழ்வில் 79ஆண்டுகளை நிறைவுசெய்து 80ஆவது ஆண்டில் இன்று (01.07.2003) அடி எடுத்து வைத்துள்ளேன்.

★ கடந்த 79ஆண்டுகளில் நான் வளர்முகப்பாதையில் நல்ல மன நிறைவோடும் சிறந்த உடல் நலத்தோடும் வாழ்வதற்கு காரணர்களாய் அமைந்த நான் கற்ற பல நல்ல நூல்களை ஆக்கிய வள்ளுவன் முதலான பல சான்றோர்களையும்,

★ அமரர்களாகிய எனது பெற்றோர்களையும் இன்றைய நாளில் மனங் கொண்டு அவர்களுக்கு எனது வணக்கங்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

★ எனது நல்வாழ்வுக்கு உறுதுணையாக இருந்த - இருந்து வருகின்ற எனது சகோதரிகள், மனைவி, பிள்ளைகள், மருமக்கள், மைத்துனர்மார், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், அயலவர்கள், அருமருந்தன்ன நண்பர்கள், என்னைக் கௌரவித்து அன்பு காட்டும் இலக்கிய நண்பர்கள், தொழிலக நண்பர்கள் மற்றும் எனக்கு அன்பும் ஆதரவும் செலுத்தும் அனைவருக்கும் இன்றைய நாளில் எனது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- வரதர்
(சாகித்ய இரத்தினம்),
தி.ச.வரதராசன்
84/3, மானிப்பாய்ச்சாலை,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 222 6164.
ஆனந்தா அச்சகம்,
தொ.பே. 222 2820.)

(C/28667) (21-14-16)

---

**UNHCR** அனுசரணையுடன்
யாழ்ப்பாண சமூகசெயற்பாட்டு மையத்தினால் நடத்தப்படும்

### "பெண்கள் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு - 2003"

இடம் - சென். அன்ரனீஸ் கல்லூரி, ஊர்காவற்றுறை.
காலம் - 02-07-2003 புதன்கிழமை
நேரம் - 9.00 a.m.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- ஏற்பாட்டாளர்.

(C28541) (21-14-16)

---

## சுயதொழில் வாய்ப்புத் திட்டம்
## ஸ்கிரீன் பிரிண்டிங் பயிற்சி

ஓர் அரிய சந்தர்ப்பம்!



### திருமண அழைப்பிதழ்

முதன் முதலாக யாழ்.நகரில் சுயமாகவே பல வர்ணங்களுடன் கூடிய திருமண மற்றும் மங்கள கரமான நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்கள் தயார் செய்யும் முறையை கற்றுத் தரவுள்ளார்.

இந்திய அச்சுக்கலை
நிபுணர் வண்ணச் சிற்பி R.பரதன் D.P.Tech.,

குறைந்த முதலீட்டுடனே வீட்டிலிருந்தே ஆரம்பிக்கக்கூடிய சிறந்த தொழில் இதுவாகும். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். ஏற்கனவே ஸ்கிரீன் பிரிண்டிங் பயிற்சியை பெற்றுக்கொண்டவர்கள் தொழில் புரிபவர்களுக்கான மேலதிக ஆலோசனைகள், தொழில்நுட்பங்கள் போன்ற பயிற்சிகளும் பிரத்தியேகமாக நடைபெறவுள்ளமையால் அதற்கான அனுமதிகளையும் பெற்றுக்கொள்ளவும்

வகுப்புகள் 04-07-2003 ஆரம்பமாகின்றன.

**CAREER. COM INSTITUTE**
இல.79, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone 0777 706334, 0777 108423

திருமண அழைப்பிதழ் டிசைன்கள்,
வாழ்த்துமடல், நகை டிசைன்கள், T.Shirt making,
நவீன Fonts, Indian Colour,
Black &White Cliparts, CD's
போன்றனவற்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

(19457) (21-14-16)

---

# 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
26
-
10
-
1926



உதிர்வு
01
-
07
-
1986

## அமரர் சி.அழகரத்தினம்

(ஓய்வுபெற்ற பிரதம தபால் அதிபர்)

குடும்பத்தின் தலைவராய், தந்தையாய்
மாண்புடன் வாழ்ந்து
இனமெல்லாம் இன்புடன் வாழ வழிகாட்டி
மலர்ந்த முகத்துடனும், மாசற்ற நெஞ்சுடனும்
வையத்துள் வாழ்வாங்கு வாழவழி
வகுத்துள்ளீர்கள்!
அப்பா நீங்கள் அருகினில் இருக்கையிலேயே
எமக்கேன் சொர்க்கம்?
அன்பே நீங்கள் அருகினில் இல்லாதபோது
எமக்கேன் சொர்க்கம்?

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

மனைவி,
பிள்ளைகள்.

(19411) (21-14-16)

---

உ
ஸ்ரீராமஜயம்

## யஜ்ஞோபவீத தாரண ப்ரம்மோபதேச அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான சுபானு வருஷம் ஆனி மாதம் 18ஆம் நாள் (02.07.2003) புதன்கிழமை பூச நக்ஷத்திரமும் திருதியை திதியும், சித்தியோகமும் கூடிய காலை 10மணி 09நிமிஷம் முதல் 11மணி 57நிமிஷம் வரையுள்ள கன்னிலக்ன சுபமுகூர்த்த வேளையில் நாவற்குழி, தச்சன்தோப்பு, வேலம்பிராய் அம்மன் தேவஸ்தான பிரதமகுரு கலாநிதி பிரம்மஸ்ரீ க.சச்சிதானந்தகுருக்கள் தம்பதிகளின் பௌத்திரனும் குடியிருப்பு சுழிபுரம், சமஸ்கிருத பண்டிதர், பிரம்மஸ்ரீ சி. வா நராஜக்குருக்கள் தம்பதிகளின் தௌஹித்திரனும்

எமது புத்திரனுமாகிய ஷடமர்ஷண ஹோத்திர
சிரஞ்ஜீவி சோ.சக்திதரசர்மா அவர்களுக்கு

யஜ்ஞோபவீத தாரண ப்ரம்மோபதேசம் செய்வதற்கு எமது குலதெய்வங்களின் திருவருளும் பெரியோர்களின் ஆசியும் கூடியுள்ளதால் மேற்படி முகூர்த்தம் பொன்னாலை, ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தான சந்நிதியில் நிகழவிருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சஹிதமாக வருகை தந்து குமாரனை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ப்ரம்மோபதேச குரு "வைதீக கிரியா கலாநிதி"
ப்ரம்மஸ்ரீ ச.சோமாஸ்கந்த குருக்கள் (மயிலணி)
"சிவாகம ஞான பாஸ்கரன்"
ப்ரம்மஸ்ரீ தா.மஹாதேவ குருக்கள் (காயத்ரீபீடம், இணுவில்)

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
தென்மட்டுவில் வேரற்கேணி கந்தசுவாமி கோயில்
காரைநகர் கருங்காலி முருகமூர்த்தி கோயில்
சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம்
சாவகச்சேரி சங்கத்தானை கந்தசுவாமி கோயில்
மீசாலை தட்டான்குளம் பிள்ளையார் கோயில்
எழுதுமட்டுவாழ் மரதங்குளப் பிள்ளையார் கோயில்
சாவகச்சேரி நுணாவில்குளம்முருகன் ஆலயம்
ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தானம். பொன்னாலை. சுழிபுரம்.

இவ்வண்ணம்
சிவப்ரம்மஸ்ரீ. க.ச. சோமாஸ்கந்த
குருக்கள் தம்பதிகள்
பிரதமகுரு

(19677)

# இளைஞர் சேவைகள் மன்ற கலாசாரப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜுலை1

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட கலாசாரப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த 21ஆம், 22ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

★ புதியநிர்மாணிப்பு நடனம்

முதலாமிடம் - க.ஶ்ரீபாஸ்கரன் (மந்திகை, பருத்தித்துறை), இரண்டாமிடம் - தி.ஜோன்சன் (டச்சுவீதி, சாவகச்சேரி), மூன்றாமிடம் - இ.சசிகுமார் (புலோலி வடமேற்கு), க.இலங்கேஸ்வரன்(மந்திகை, பருத்தித்துறை).

★கிராமிய நடனம்

முதலாமிடம் - க.ஶ்ரீபாஸ்கரன் (மந்திகை, பருத்தித்துறை), இரண்டாமிடம் - தி.ஜோன்சன் (டச்சுவீதி, சாவகச்சேரி).

★பரதநாட்டியம்

முதலாமிடம் - விஜயா பாலசுந்தரம் (ஆனைப்பந்தி), இரண்டாமிடம் - வி.அவிருந்தன் (விக்காவில், காரை நகர்), மூன்றாமிடம் - தங்கவேல் சுரேஸ்(சுதுமலை கிழக்கு).

★புதிய பாடல்

முதலாமிடம் - த.சந்திரமலர் (அல்வாய் தெற்கு).

சாஸ்திரியப்பாடல்

முதலாமிடம் - ம.லதாங்கி (நந்தாவில் வீதி, கொக்குவில்), இரண்டாமிடம் - ஜெயானந்தவதி ரமேஸ் (வல்வெட்டி), மூன்றாமிடம் - கே.தர்சின்(இணுவில் மேற்கு).

★கிராமியப்பாடல்

முதலாமிடம் - தி.செந்தூரன் (சங்கானை மேற்கு), இரண்டாமிடம் - தி.சுகிர்தன் (சங்கானை மேற்கு), மூன்றாமிடம் - தி.சந்திரமலர்(அல்வாய் தெற்கு).

★மிருதங்கம்

முதலாமிடம் - பசியாம்கிருஷ்ணன (கே.கே.எஸ்.வீதி, யாழ்.), இரண்டாமிடம் - வே.விஜயசந்திரா (கொக்குவில் மேற்கு), மூன்றாமிடம் - விராகவன் (அராலி வீதி, சங்கானை).

★வயலின்

முதலாமிடம் - பசியாம்கிருஷ்ணன (கே.கே.எஸ்.வீதி, யாழ்.), இரண்டாமிடம் - கே.ஜனனி(இணுவில் மேற்கு), மூன்றாமிடம் - தி.செந்தூரன் (சங்கானை மேற்கு).

★வீணை

முதலாமிடம் - சோ.குமுதா (கோயில் வீதி, நல்லூர்).

★ஓகன்

முதலாமிடம் - வே.சரவணபவன் (கோண்டாவில் கிழக்கு), இரண்டாமிடம் - அ.அன்னிர்றா(பருத்தித்துறை).

★அறிவிப்பாளர்

முதலாமிடம் - ப.சுரேந்திரன் (கோண்டாவில் மேற்கு), இரண்டாமிடம் -க.ஜெக்சன்(சண்டிலிப்பாய் மத்தி), மூன்றாமிடம் - இ.கெங்காதரன் (கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்).

★பேச்சு

முதலாமிடம் - வி.சுமதீஸ்வரன் (கப்பமலை), இரண்டாமிடம் - க.ஜெக்சன்(சண்டிலிப்பாய் மத்தி, மூன்றாமிடம் - த.தர்மசேகரம் (யாழ்.பல்கலைக்கழகம்). (எ-10)

## செய்திக்கொத்து

### வடலியடைப்பு நல்லுணி வீதியை புனரமைக்கக் கோரிக்கை

சண்டிலிப்பாய்,ஜுலை1

வடலியடைப்பு நல்லுணி வீதி கடந்த பலவருட காலமாக புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் இருப்பதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை, புதறாணை சித்தி விநாயகர் ஆலயம் ஆகியவற்றுக்கும் வயல் காணிகளுக்கும் போக்குவரத்து செய்வதற்கு பொதுமக்கள் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இதற்கிடையில் - மேற்படி வீதியை விரைவில் புனரமைப்புச் செய்து தருமாறு இப்பகுதியிலுள்ள பொது நிறுவனங்களும் மற்றும் பொதுமக்களும் இணைந்து கையொப்பமிட்டு வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் செயலாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக பொறுப்பதிகாரிக்கும் இக் கடிதத்தின் பிரதி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (எ-135)

### சுயதொழில் முயற்சிக்கு கடன்

சண்டிலிப்பாய்,ஜுலை1

வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் நுண்கருத்திட்டத்தின் கீழ் கிடைத்த சுழற்சி முறையிலான சுயதொழில் முயற்சிக் கடன் நிதியிலிருந்து மேலும் 21பேருக்கு சுயதொழில் முயற்சிக்கடனை வழங்கியுள்ளது.

விவசாயம், கால்நடை வளர்ப்பு, கோழிவளர்ப்பு ஆகிய தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக தலா 10 ஆயிரம் ரூபா வீதம் இக்கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் க.அரசரத்தினம் தெரிவித்தார்.

இதேவேளை - சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் சங்கத்திற்கு வழங்கப்பட்ட சுயதொழில் முயற்சிக்கடன் திட்ட நிதியிலிருந்து மேலும் ஒன்பது பேருக்கு கடனுதவி அண்மையில் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-135)

### பிரதேச செயலர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஜுலை1

யாழ் மாவட்ட செயலகத்தின் தலைமையக உதவி அரச அதிபராகக் கடமையாற்றி வந்த வே.வீரபத்திரப்பிள்ளை வடமராட்சி தெற்கு - மேற்கு கரவெட்டி பிரதேச செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் இப்பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலராகக் கடமையாற்றிய செ.சிவபுண்ணியம் ஓய்வுபெற்றுச் சென்றதையடுத்தே அவ்விடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (ஒ-5)

### சுழற்சி முறையில் கடனுதவி

கொழும்புத்துறை,ஜுலை1

யாழ். புனித முன்னேற்ற நடுநிலையம் 'மிசறேயோ' என்னும் ஜேர்மன் கத்தோலிக்க நிறுவனத்தின் அனுசரணையுடன், பல சுழற்சிமுறைக் கடனுதவிகளை கிராமிய சங்கங்கள் ஊடாக வழங்கி வருகிறது.

8 மீனவர் சங்கங்களுக்குத் தலா 75ஆயிரம் ரூபாவும் பெண்கள் சிறோதரப் பனிவுச்சங்கங்கள் 9இற்கு 50ஆயிரம் ரூபாவும் சுயதொழில் சுழற்சிக் கடனுதவியாக வழங்கப்பட்டு வருவதாக இயக்கு நிறுவன இயக்குநர் சீ.ஜே.ஜெயக்குமார் அடிகள் தெரிவித்தார்.

இவ்வுதவிகள் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள விவசாய, கைத்தொழில், மீனவ குடும்பங்களின் வாழ்வை மேம்படுத்த உதவும் எனவும் - அவர் தெரிவித்தார். (எ-30)

### வெடிபொருள்கள் அகற்றப்படுகின்றன

கைதடி,ஜுலை1

செம்மணி மயானத்தை அண்டிய கண்டிவீதிப் பக்கமாகவுள்ள மிதிவெடிகள் மற்றும் வெடிபொருள்கள் கடந்த சில தினங்களாக 'ஹலோ ரஸ்ட்' நிறுவன மிதிவெடி அகற்றும் பிரிவினரால் அகற்றப்பட்டு வருகின்றன. (4-75)

### 'நோராட்' உதவியுடன் நீர் பாதுகாப்புத் திட்டம்

வரணி,ஜுலை1

புனர்வாழ்வு, அகதிகள் மீளக்குடியமர்வு அமைச்சு யாழ்.மாவட்டத்தில் நீர் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை செயற்படுத்தவுள்ளது.

நோராட் நிறுவனத்தின் அனுசரணையுடன் செயற்படுத்தப்படவுள்ள இத்திட்டம் இவ்வருட நடுப்பகுதியில் இருந்து ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (4-170)

### சமயப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜுலை1

வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலய மஹோற்சவத்தினை ஒட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட சமய அறிவுப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர் பெயர், விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் கீழ் மற்றும் மேற்பிரிவுகளில் முறையே மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:

கீழ்ப்பிரிவு

க.சுவஸ்திகா, ம.மதீசன், இ.சர்மிளா இவர்கள் மூவரும் வேலணை மேற்கு நடராசா மகாவித்தியாலயத்தில் கற்பவர்கள்.

மேற்பிரிவு

ப.விஸ்ணுகாந்த்(வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயம்), செ.சத்தியன்(யாழ். இந்துக்கல்லூரி), செ.சயந்தன் (யாழ். இந்துக் கல்லூரி). (ஒ-5)

### 20 மாணவர்கள் பல்கலைக்குத் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜுலை1

முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் இருந்து 20மாணவர்கள பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ளனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களில் மருத்துவத்துறைக்கு 3பேரும் பொறியியல் பீடத்திற்கு 3பேரும் முகாமைத்துவத்திற்கு 3பேரும் ஏனைய 12பேரும் வேறு துறைகளுக்கும் தெரிவாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ)

### மகளிர் அமைப்பு அங்குரார்ப்பணம்

செம்பியன்பற்று,ஜுலை1

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள போக்கறுப்பு கிராம அலுவலர் பிரிவில் மகளிர் அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை போக்கறுப்பு கிராம அலுவலர் என்.பாலசுந்தரம் தலைமையில் இந்த அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது.

மகளிர் அமைப்புத் தலைவராக சந்திரசேகரம் அமுதனியும், செயலாளராக குமாரகுலசிங்கம் சந்திராதேவியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

10 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. (எ-36)

### திறந்தவெளி அரங்கில் துப்புரவுப் பணி

அரியாலை,ஜுலை1

முற்றவெளிப்பகுதியில் அமைந்திருக்கும் திறந்தவெளி அரங்கு சுற்றாடல் பகுதியை துப்புரவாக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

# கலை, இலக்கிய கர்த்தாக்கள் வவுனியாவில் கௌரவிப்பு

வவுனியா கலை, இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஆறாண்டு நிறைவு விழாவில் வவுனியாவில் பணியாற்றியதுடன் கல்வி, கலை, இலக்கிய சேவையும் ஆற்றிய இரு கல்வியியலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.



வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி முன்னாள் முதல்வர் செ.அழகரெத்தினம் 'கல்வியியற் செல்வர்' என்னும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். சுமார் பத்தாண்டுகள் கல்லூரி முதல்வராக இருந்து அதன் ஆரம்ப வளர்ச்சியில் பாடுபட்டதுடன், வவுனியா பிரதேச கலை, இலக்கியத்துறைகளின் முன்னேற்றத்துக்கு தன் பங்களிப்பையும் வழங்கியுள்ளார். கல்லூரி சஞ்சிகை 'வித்தியாதீபம்' வெளியீட்டில் ஆர்வங்காட்டி உழைத்ததோடு, 'தானும் கல்வியும் இலக்கியமும்', 'சுவாமி விபுலானந்தரின் கல்விச் சிந்தனைகளும் தொண்டுகளும்' எனும் இரு நூல்களை வெளியிட்டுள்ளார். பேராசிரியர் சு.வித்தியானந்தனின் கூத்து மீட்டுப்பணியில் இணைந்து ஆடியுமுள்ளார்.



கவிஞர் ச.அருளானந்தம், வவுனியா பிரதேசத்தில் தொண்ணூறுகளில் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி, வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சில் மேலதிக கல்விப் ,பணிப்பாளராக இருந்து ஓய்வுபெற்றவர். சிறுவர் இலக்கியங்கள் படைப்பதில் ஓயாது ஈடுபட்டுழைப்பவர். ஏற்கனவே 'இன்பக் கனிகள்', 'பாட்டுப் பாடுவோம்' போன்ற சிறுவர் பாடற்தொகுப்புகள் மற்றும் 'பூஞ்சிட்டுக்கள்', 'தங்க மாம்பழம்' முதலான 'சிறுவர் கதைகள்', 'காட்டில் கலவரம்' போன்ற சிறுவர் நாவல்கள் என சுமார் 19 நூல்கள் வெளிவந்துள்ளன. கேணிப்பித்தன் எனும் பெயரில் சிறுகதைகள், கவிதைகள் வெளியிட்டுள்ளார். கவிஞர் ச.அருளானந்தம் சிறுவர் இலக்கியச் செல்வர் எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

வவுனியா அரச அதிபர் கேகணேஷ் அவர்கள் பொன்னாடைகளை போர்த்த, தமிழ்மணி அவர்கள் மாலைகளைச் சூட, வவுனியா வளாக முதல்வர் பேராசிரியை இ.மகேஸ்வரன் விருதுகளை வழங்கினார். வவுனியா வளாக ஆங்கில விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீகணேசன் விருது வழங்கும் உரையை நிகழ்த்தினார்.

விழாவில் வட்டத்தின் அரையாண்டுச் சஞ்சிகை 'மாருதம்' மூன்றாவது இதழ் பிரதேச செயலர் திரு.எஸ்.சத்தியசீலன் வெளியிட்டு வைக்கப்பட்டது. வவுனியா வளாக கலை, கலாசார மன்றமும் கலை, இலக்கிய நண்பர்கள் வட்டமும் இணைந்து உருவாக்கிய 'வன்னி ஊற்று' இசை நாடவும் முதல்வரினால் வெளியிட்டு வைக்கப்பட்டது.



**வவுனியா கலை, இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் அரையாண்டு சஞ்சிகை 'மாருதம்' இதழ் ஒன்றை வவுனியா பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் வெளியிட்டு வைக்க முதற்பிரதியை வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பெறுகிறார். சஞ்சிகையின் இணை ஆசிரியர் கந்தையா ஸ்ரீகணேசனும் அருகில் காணப்படுகின்றார்.**

## தனங்களப்பு, மறவன்புலோ பகுதிகளின் அவலம்!

# வயல்களில் பதுங்குகுழிகள், மண் குவியல்கள் உவர்நீர் தடுப்பு அணையைக் காணவில்லை!

## அங்கு சென்று திரும்பிய மக்கள் தெரிவிப்பு

தென்மராட்சி,ஜுலை1

தென்மராட்சியின் தெற்கு பிரதேசங்களான தனங்களப்பு, மறவன்புலோ பகுதிகளில் பெரும் அழிவுகள் ஏற்பட்டிருப்பதாக அப்பகுதிகளுக்கு அருகில் சென்றுதிரும்பும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பகுதிகளிலுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்செய்கை வயல்களில் நீண்டதூரத்திற்கு பல பதுங்குகுழிகள் வெட்டப்பட்டிருப்பதாகவும் -

வயல்களின் வரம்புகள் அகற்றப்பட்டு பல இடங்களில் பெருமளவு மண் குவியல்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் -

தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், இப்பகுதியிலுள்ள வயல்களுக்குள் உப்புநீர் உட்புகாமல் தடுப்பதற்காக யு.என்.எச்.சி.ஆர். மற்றும் கெயர் ஆகிய நிறுவனங்களினால் அமைக்கப்பட்ட தடுப்பு அணைகள் தற்போது இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 1998/99 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் சுமார்14 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்த தடுப்பு அணைகள் புல்டோசர்கள் கொண்டு அகற்றப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

தென்னை மற்றும் பனந்தோட்டங்கள் அழிக்கப்பட்டு மேற்படி பகுதிகள் வெட்டவெளியாகக் காட்சியளிப்பதாகவும் கூறப்பட்டது.

ஏராளமான வீடுகள், இருந்த இடமே தெரியாத அளவுக்கு சிதைக்கப்பட்டிருப்பதைக் காணமுடிவதாகவும் -

ஆங்காங்கே பல இடங்களில் பாரிய முட்கம்பிச்சுருள்கள் போடப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்படுகின்றது.

வளவுகள் யாவும் வேலிகள், மதில்கள் அழிந்த நிலையில் காணப்படுகின்றன. ஆயிரக்கணக்கான மாடுகள் கட்டாக்காலிகளாக அப்பகுதிகளில் அலைகின்றன. ஆலயங்கள் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன என்றும் - அப்பகுதிக்குச் சென்று திரும்பிய மக்கள் மேலும் தெரிவித்தனர்.

இப்பகுதிகளில் மக்கள் இன்னமும் மீளக்குடியமர அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-4-117)

# கொழும்புத்துறை கிழக்கில் அனைத்து வீதிகளும் சேதம்

கொழும்புத்துறை,ஜுலை1

கொழும்புத்துறை கிழக்குப் பகுதியில் உள்ள வீதிகள் அனைத்தும் நீண்டகாலமாக திருத்தம் செய்யப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுவதாக பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

நெடுங்குளம் வீதி, உப்புக்குளம் வீதி, முதலாம், இரண்டாம் மற்றும் சகல குறுக்கு வீதிகளுமே இவ்வாறு பலத்த சேதமடைந்துள்ளன.

இப்பகுதிகளில் பெரும்பாலான குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளதால், போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும் கூறப்பட்டது.

அதேவேளையில், கொழும்புத்துறை துறைமுகப் பகுதியை பிற இடங்களுடன் இணைக்கும் 4ஆம் குறுக்கு வீதியில் உள்ள பாலம் நீண்டகாலமாக இடிந்து காணப்படுகிறது.

இதனால், பொருள்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் இப்பகுதிக்குச் சென்றுவர முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்டோர் இது குறித்து பாராமுகமாக உள்ளதாகவும் இப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (எ-30)

### ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜுலை1

நேற்று திங்கட்கிழமை நடைபெறவிருந்த இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலய ஆசிரியை செல்வி சுவாம்பிள்ளையின் சேவை நலன் பாராட்டு விழா தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக கன்னியர்மட மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் அறிவித்துள்ளது.

இப்பாராட்டு விழா நாளை புதன்கிழமை காலை 9மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் எனவும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-8)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடற்றவன்

"வீடற்றவன்" நாவலின் விளக்கமும் விமர்சனமும் O/L பரீட்சையில் விருப்பப்பாடமான தமிழ் இலக்கியத்திற்குரிய பாடப்புத்தகம். எல்லா வகை இலக்கியங்களும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. ரூபா 25.00. (19676)

## திருமண சேவை

1971ஆம் ஆண்டு, ரோகிணி செவவாய் அற்ற அரச கணக்காளர் (Accountant) தொழில் செய்யும் மணமகனிற்கு படித்த, அழகான பெண் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை. 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (19680)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, வயது 35, பரணி நட்சத்திரம 5'4" உயரமுள்ள, வெண்ணிறமான, கொழும்பில் எஞ்சினியராகக் கடமையாற்றும் மணமகனுக்குப் பொருத்தமான தகுந்த மணமகள் தேவை. விளம்பர இல. 1935, C/o உதயன், யாழ்ப்பாணம். (19679)

## இசைக்குறிப்புகள்

ஓகன், வீணை, மெலோடிக்கா போன்ற இசைக்கருவிகளுக்கான சினிமாப் பாடல்களின் இசைக்குறிப்புகள் (பாகம் 1-9) வெளிவருகிறது. தொடர்பு: S.S.ரஜீந்திரன், இல. 75, கோயில் வீதி (நல்லூர் கந்தசுவாமி கோயிலிலிருந்து 700m. தெற்கே). T.P. 0777 031293. (19599)

## தவறிவிட்டது

29-06-2003 அன்று இரவு 9.00 மணியளவில் சண்டிலிப்பாய் சந்திக்கும் தொட்டிலடிச் சந்திக்குமிடையில் உடுப்புகள், வீட்டுத்திறப்பு அடங்கிய பிரயாணப்பை அம்பாள் கொமினிக்கேசனுக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். வீ.நாகமுத்து, காளி கோயிலடி, சண்டிலிப்பாய். T.P. 0777 772307 (19692)

## காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாயில் ஐயனார் வீதியில் கிணற்றுடன் கூடிய இருபத்திரண்டு பரப்பு பனை வளவு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 1).சி. செல்வரத்தினம், இல.22, கைலாச பிள்ளையார் கோவிலடி, நல்லூர், யாழ்ப்பாணம். 2).கண்மணி சோதிலிங்கம், ஐயனார் வீதி, சண்டிலிப்பாய். (19415)

## கிளிநொச்சியில் கூட்டுறவு மாதம் பிரகடனம்

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களினால் இன்று முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் 31ஆம் திகதி வரையான ஜூலை மாதம் கூட்டுறவு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த கால யுத்தத்தின் காரணமாக வன்னிப் பிரதேசத்தில் கூட்டுறவுச் செயற்பாடுகள் யாவும் சீரழிந்துள்ளன. இந்தச் சமாதானச் சூழலில் அவற்றை மீளவும் கட்டியெழுப்பும் நோக்கத்துடனேயே இந்த ஜூலை மாதத்தைக் கூட்டுறவு மாதமாகப் பிரகடனப்படுத்தியுள்ளோம் என்று கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கத் தலைவர் வைகுந்தராஜா தெரிவித்துள்ளார்.

இக்காலப் பகுதியில் வன்னிப் பிரதேசத்தில் பல்வேறு நிகழ்வுகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கூட்டுறவு ஊழியர்கள் பல்வேறு இடங்களிலும் சிரமதானப் பணிகளில் ஈடுபடவுள்ளதுடன், பேச்சு, கட்டுரைப் போட்டிகளும் கரப்பந்தாட்டப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.(எ-10-ரி)

## அரச காணிகளைப் பெற உள்ளூராட்சி அமைச்சின் அனுமதி தேவை

பொதுப் பணிக்காக அரச காணிகளை பயன்படுத்தவதாயின் உள்ளூராட்சி மன்றங்கள் மாகாணசபை உள்ளூராட்சி அமைச்சிடம் அனுமதி பெறப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தெ.து.விஜயலட்சுமி சகல திணைக்களத் தலைவர்களுக்கும் சுற்றிக்கை மூலம் இதனை அறிவித்துள்ளார்.(எ-185-4)


## யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் கவனத்திற்கு!

அனைத்து இறுதி வருட முகாமைத்துவ மாணவர்களும் முகாமைத்துவ மாணவர் மன்றச் செயற்குழு உறுப்பினர்களும் புகைப்படம் எடுப்பதற்காக 03-07-2003 வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக முன்றிலில் தவறாது சமுகந்தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

முகாமைத்துவ மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(19691) (21-19-14-)

## இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

★ 100% இளமையையும் வலிமையையும் தரும்!

### சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

*MANUFACTURED BY:*
**SITHARA PRODUCTS,**
PUTTALAM ROAD.
(REG.NO: 6382) AR/PR/No. 228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா,
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். TP:222 2567.

(C28684)


## பிற்போடப்பட்டுள்ளது

சாரையடி, புலோலி தெற்கில் இன்று (01-07-2003) செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவிருந்த ஆங்கில வகுப்புகள் பிரயாண ஒழுங்கில் ஏற்பட்ட இடையூறுகள் காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளன. வகுப்புகள் மீண்டும் ஆரம்பமாகும் திகதி (12-07-2003ஆம் திகதிக்கு முன்பாக) விரைவில் அறிவிக்கப்படும். பிரவேசக் கட்டணத்தைச் செலுத்தி தங்கள் பதிவுகளை உறுதிசெய்த மாணவர்கள் மட்டுமே வகுப்புகளுக்கு அனுமதிக்கப்படுவார்கள் என்பதை அறியத் தருகின்றோம்.

K.C. சிவசுப்பிரமணியம்
(ஆங்கில ஆசிரியர்)

(சி-28672)(21-14-16)


## பதவி வெற்றிடங்கள்

எமது நிறுவனத்துக்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை. உடனடியாக விண்ணப்பங்களுடன் நேரில் வரவும்.

**1. உணவுச்சாலை முகாமையாளர்**
**POST OF RESTAURANT MANAGER**

*தகைமைகள்:* 1. சரளமாக ஆங்கிலம் பேசக் கூடியவர்கள்.
2. மூன்று வருடகால அனுபவம்.
3. யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

**2. உபசரணையாளர் - RECEPTIONIST**

*தகைமைகள்:* 1. இலங்கைக் ஹோட்டல் பாடசாலையில் கல்வி கற்றவர்கள் (RECEPTIONIST COURSE)
2. சரளமாக ஆங்கிலம் பேசக் கூடியவர்கள்.

☞ வரும்போது சத்தாட்சிப் பத்திரங்கள் கொண்டு வரவேண்டும்.

நிர்வாகி
**பிள்ளையார் ஸ்ரோஸ் (INN)**
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(19685) (21-26-14-19)


## 45ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 25 - 02 - 1988

இறப்பு 18 - 05 - 2003

### அமரர் மகேந்திரன் அஜந்தன்

எங்கும் எதிலும் உன் நினைவுகள்தான் தெரிகிறது
ஏங்கும் எம் முகம் மறந்து சென்றதேனையா; அஜந்தா?
எங்கள் உயிருடன் கலந்துவிட்ட தெய்வம் நீ
எம்மைத் தேடி நிற்கும் உன் திருமுகத்தைத் தேடுகின்றோம்
எம் இதயச்சுமையை இறக்குவது எப்போதையா?

இன்று (01.07.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பச்சு வீதி,
மானிப்பாய்,

பிரிவால் துயருறும்:
அம்மா, அப்பா,
தம்பி, தங்கை.

(19693) (21-26-14-15)

## உவகையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி பிரதேச சபையின் வருமான மேற்பார்வையாளர்

### திரு.கந்தையா குமாரு

அவர்கள் அகில இலங்கை முழுவதுக்குமான சமாதான நீதிவானாகத்தெரிவு செய்யப்பட்டமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சாவகச்சேரி பிரதேச சபை,
கொடிகாமம். (19688)(21-25-14-19)

*கொடிகாமம் பொதுச் சந்தை உத்தியோகத்தர்கள்*

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில் 01 - 07 - 1940

ஆண்டவன் அடியில் 01 - 06 - 2003

### அமரர் வே.சிதம்பரப்பிள்ளை

(முன்னாள் முகாமையாளர், கொடிகாமம் சங்கக்கிளை, உரிமையாளர், இலக்ஷ்மி உணவகம், நெல்லியடி)

முப்பத்தொரு நாளானாலும் முகம் மறந்து போகாது
எப்போதும் எம்முன்னே எந்நாளும் வாழ்வீர்!
உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்!

இன்று (01-07-2003) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை என்பவற்றில் கலந்து கொள்வதோடு மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*வரணி வடக்கு,*
*வரணி.*

- மனைவி, பிள்ளைகள், மருமகன்.

(19697)(21-14-16)

## மரண அறிவித்தல்

### J.S.நீக்கிலஸ்

(இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)

யாழ்ப்பாணம், பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும் மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட J.S.நீக்கிலஸ் 29.06.2003 ஞாயிற்றுக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோன் செல்லத்தம்பு அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்ற பெனடிக்ரா ஞானரட்ணத்தின் அன்புக் கணவரும் திருமதி இராசமணி மரியாம்பிள்ளையின் சகோதரனும் அன்ரன் விக்னராஜா (கனடா), அஞ்சலோ, ஆனந்தராஜா, அலெரன் தயாளராஜா (கனடா), மனோகரி அன்ரனி, சிசில் செல்வராஜா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சந்திரா (கனடா), மேனகா (கனடா), M.A.N.அன்ரனி (புனித பத்திரிசியார் கல்லூரி, ஆசிரியர்), லூட்ஸ் (பபா), S.A.P. துரைரட்ணம் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.07.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00மணிக்கு (24, மாட்டின் லேன், யாழ்ப்பாணம்) நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*24, மாட்டின் லேன்,*
*யாழ்ப்பாணம்.* (19684)(21-14-19)

தகவல்:
M.A.N.அன்ரனி (மருமகன்).

### மனுவேற்பிள்ளை பேதுருப்பிள்ளை

(சிங்கம்),

கரம்பொன் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனுவேற்பிள்ளை பேதுருப்பிள்ளை (29-06-2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை - அன்னம்மாவின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான பத்திநாதர் - ஆரோக்கியத்தின் அன்பு மருமகனும் மேரிதிரேசாவின் அன்புக் கணவரும் புவிராஜா (ஜேர்மனி), யோகராஜா (கனடா), யசிந்தா (ஜேர்மனி), சாந்தா (கனடா), நவராஜா (ஆசிரியர், - புனித அந்தோனியார் கல்லூரி - ஊர்காவற்றுறை) ஆகியோரின் அன்புத் தந்தையும் பெலிசியா (ஜேர்மனி), நிர்மலா (கனடா), வசீகரன் (ஜேர்மனி), ஜெயராஜா (கனடா), சுரோஜினி (ஆசிரியை - புனித அந்தோனியார் கல்லூரி - ஊர்காவற்றுறை) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற பொன்ராஜா, காலஞ்சென்ற செல்லமணி மற்றும் பூமலர் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற ஜேற்றூட் மற்றும் ஜேம்ஸ், இராசேந்திரம், ஞானம்மா, இராசதுரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிறிமினோ, பிறிஸ்ரோ, டயான், யுவான், வினோஷினி, வினோஷியன், ரமிந்தா, பியங்கா, ஹரினா, அருள்ஜீவிதன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (02.07.2003) புதன்கிழமை மு.ப 10.00மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் கரம்பொன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரம்பொன் கிழக்கு,*
*ஊர்காவற்றுறை.* (19671)(21-19-14).

தகவல்:
P.W.நவராஜா (மகன்)

## இன்று உங்களுக்குப் பிறந்த நாள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 01 - 07 - 1938 | 11 - 08 - 2001 |

அமரர்

**பொன்னையா சங்கரப்பிள்ளை (J.P.)**

(முன்னாள் அதிபர், உடுத்துறை ம.வி.)

பண்புடனே பாரினில் வாழ்ந்த - எம்
பாசமுள்ள அத்தானுக்கு
அன்பான பிறந்த நாள் வாழ்த்துக்கள்
உறவிற்கு உரியவராய், ஊருக்கு உகந்தவராய்
ஏற்றங்கள் நாம் காண ஏணியாய்
நின்றவரே!
உங்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள்
கூறும் நாம்
என்றும் உங்கள் நினைவுடனேயே
வாழ்கின்றோம்.

உங்கள் அன்பான
**மனைவி,**
**மைத்துனரும், குடும்பத்தினரும்.**

செ. திரவியநாதன்,
வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,
மருதங்கேணி,
தாளையடி.

(21-14-19) (19630)

## கடன் அடிப்படையில் கடற்றொழில் உபகரணம்

யாழ்ப்பாணம், ஜூலை1

ஐ.நா. அபிவிருத்தி மற்றும் 'நிக்கோட்' திட்டங்களின் கீழ் மருதங்கேணிப்பகுதி கடற்றொழிலாளர்களுக்கு கட்டுமரங்கள், வள்ளங்கள் போன்ற கடற்றொழில் உபகரணங்கள் கடன் அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

சுழற்சிமுறைக் கடன் அடிப்படையில கடற்தொழில் சங்கங்கள் ஊடாக இந்த உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இதன்கீழ் முதற்கட்டமாக 70 கட்டுமரங்களும் 15 வள்ளங்களும் வழங்கப்படவுள்ளன. மேற்படி நிறுவனங்களின் இந்தத் திட்டத்தினை கடற்தொழில் திணைக்களம் பிரதேச ரீதியாக செயற்படுத்தி வருகின்றது.

இத்தகைய சுழற்சி முறைக்கடன திட்டத்தின் கீழ் முன்னர் யாழ். நகர கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன என்று கடற்றொழில் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-4-ரி)

## விவசாய சங்கங்களுக்கு கியூடெக் நிதியுதவி

கொழும்புத்துறை, ஜூலை1

தென்மராட்சிப்பகுதியில் நான்கு விவசாய சங்கங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா சுழற்சிமுறைக் கடனாக கியூடெக் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

கைதடி, சாவகச்சேரிப் பகுதியில தலா ஒவ்வொரு சங்கத்துக்கும்

மட்டுவிலில் இரண்டு சங்கங்களுககும் விவசாயத் தொழிலை மேம்படுத்தும் முகமாக இவ்வுதவிகள் வழங்கப்பட்டதாக யாழ்.மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் தெரிவித்தார்.

(எ-30)


## உடன்தேவை

எலக்ரோ பிளேட்டிங் பொலிசிங் செய்யக்கூடியவர் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:
**பிள்ளையார் மெற்றல்**
57, நவீன சந்தை, வவுனியா.
T.P. 024 - 20129,
024 - 21577

(19644) (21-14-19)


நவாலி திருவருள்மிகு ஸ்ரீ நாகராஜராஜேஸ்வரி அம்பாள் திருக்கோயில்

(அம்பிகேஸ்வரம்)

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

| | |
|---|---|
| எண்ணெய்க்காப்பு | 01-07-2003 செவ்வாய்க்கிழமை<br>முற்பகல் 11.00மணிமுதல் மாலை 5.00 மணிவரை |
| திருக்குடமுழுக்கு | 02-07-2003 புதன்கிழமை<br>முற்பகல் 11.15மணி முதல் 11.52 மணி வரை<br>மாலை 6.00மணிக்கு வசந்தமண்டப பூஜை. |

கும்பாபிஷேக பிரதமகுரு:-

*சிவாகம கிரியாரத்தினம்*

**பிரம்மஸ்ரீ சுந்தர தியாகராஜக்குருக்கள்**

சர்வசாதகாச்சாரியார்:-

*சாதகாச்சாரியமணி*

**பிரம்மஸ்ரீ செந்தில்நாத சர்மா**

- அன்பர் ஷர்மாஜி
ஆலய பிரதமகுரு.

(19642) (21-14-19)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 22 - 01 - 1972 | 22 - 06 - 2001 |

**அமரர் கிருஸ்ணபிள்ளை கிருபாலன்**

(4ஆம் வட்டாரம், மண்கும்பான் கிழக்கு)

கிருபா மண்ணுலகில் நீ வாழ்ந்த வாழ்வுதனை
எண்ணி எண்ணி எம் இதயம் வாடுதையா!
நூறு ஆண்டுகள் சென்றாலும் உன் நினைவு மாறாது!

பிரிவால் வருந்தும்:
பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள்.

*மண்கும்பான் கிழக்கு.* (19597) (21-14-19)


# சுடர் ஒளி 06-07-2003 இதழில்

விலை 16/=




- முட்டுக்கட்டையை களைந்த லண்டன் சந்திப்பு
- புலனாய்வு அதிகாரி படுகொலை கொழும்பில் உருவாகும் நெருக்கடி
- வாஜ்பாயின் சீன விஜயம்
- கறுப்பினத்தவளின் காதலுக்காக இளவரசர் பட்டத்தை துறக்கத் தயார்!
- மக்களின் தேர்விலே தமிழர் தலைமை சர்ச்சையாக்கும் நிலையோ மடமை
- அமைதிக்கு வினைவோர் கதி? சமாதான விரோதிகள் சதி!
- இராணுவத்தை அச்சுறுத்திய பொங்கு தமிழ் கோஷம் (வடபுலம்)
- நாடாளுமன்றத்தை கேலிக்கூத்தாக்கும் போராட்டங்கள்


மற்றும் அரசியல் அம்பலம், சினிமா, விளையாட்டு, இளஞ்சுடர், மசாலா மிக்ஸ், பித்தன் பதில்கள், கவிதைப்புனல்.

(அ-28659)

# முதலாவது பிறந்த தின வாழ்த்து

01-07-2003

H A P P Y B I R T H D A Y



இணுவிலைச் சேர்ந்த திரு.திருமதி மதியழகன் குமாரநந்தினி தம்பதிகளின் செல்வப்புதல்வன்

## செல்வன் ஷகாயன்

தனது முதலாவது பிறந்த தினத்தை ஜேர்மனியில் உள்ள தனது இல்லத்தில் இன்று (01.07.2003) செவ்வாய்க்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, அத்தைமார், மாமன்மார், மாமிமார், பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி, பூட்டம்மா ஆகியோர் இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் அருள்பெற்று சீருடனும், சிறப்புடனும் பல்லாண்டு வாழ உளமார வாழ்த்துகின்றார்கள். தகவல்:

*இணுவில் தெற்கு* (19703) (30-12-18) தி.பரமலிங்கம் *(அப்பப்பா)*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு. இ.த. விக்னராஜா அவர்கள் முன்னிலையில் 23.06.2003 அன்று சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட கொற்றாவத்தையைச் சேர்ந்த

**திரு.அருமைத்துரை அன்பழகன் (B.A)**

அவர்களைப் பாராட்டி அகமகிழ்வதோடு, அவரது பணி சிறக்கவும் மேலும் பல பட்டங்கள் பெறவும் வாழ்த்துகின்றோம்.

திரு.மு.கனகலிங்கம்

*திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.* குடும்பமும் மருமக்களும்

(c/28670) (25)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நெடுந்தீவு மேற்கைச்சேர்ந்த **திரு.வ.சங்கரப்பிள்ளை** *(யாழ்.மாநகரசபை முன்னாள் வருமான பரிசோதகரும் நெடுந்தீவு பிரதேச சபை, பிரஜைகள் குழு ஆகியவற்றின் முன்னாள் தலைவரும் இணக்கசபையின் முன்னாள் செயலாளரும்)*

அவர்கள் 16.06.2003ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். மாவட்ட நீதிபதி உயர்திரு. இ.த.விக்னராஜா அவர்களது முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து பதவி ஏற்றுள்ளார்.

அவரது தளராத சேவைக்குக் கிடைத்த பதவி அறிந்து நெடுந்தீவு மக்கள் அனைவரும் பெருமைப்படுவதுடன் அவரது தன்னலமற்ற சேவைகள் மேன்மேலும் தொடர வாழ்த்தி இறைவனிடம் ஆசிவேண்டிப் பிரார்த்திப்போமாக.

நெடுந்தீவு - 05. (19696) (30-25-12-18) *சு. குமாரசாமி. குடும்பத்தினர்.*

## சமுர்த்தி அலுவலருக்கு கருத்தரங்கு

யாழ். மாவட்ட சமுர்த்தி வங்கிகளின் உத்தியோகஸ்தர்கள், முகாமையாளர்களுக்கான வங்கி நிதி தொடர்பான பயிற்சிநெறி கருத்தரங்கு இன்று தொடக்கம் எதிர்வரும் 9ஆம் திகதி வரை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த பயிற்சி நெறி கருத்தரங்கில், சமுர்த்தி அதிகார சபையின் வடக்கு - கிழக்கு பெருந்தோட்டப் பணிப்பாளர்களான எஸ்.நடேசராசா, எஸ்.பந்துசேனா ஆகியோரும் -

வங்கி நடவடிக்கைப் பணிப்பாளர் எஸ்.நியன்வெல, பிரதிப்பணிப்பாளர் எஸ்.குணரட்னவும் - கலந்துகொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-180)

## சைவப்புலவர் பரீட்சைக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை1

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்படும் இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் பட்டப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் பட்டப் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் இலக்கணம், இலக்கியம், சாத்திரம், உரைநடை, வரலாறு ஆகிய வினாப்பத்திரங்களுக்கு விடையளிக்க வேண்டுமென சங்கத்தின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வசந்தசாமி அறிவித்துள்ளார்.

மேற்படி பட்டப்பரீட்சைக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்பாக 125, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்றும் -

மேற்படி முகவரியில் பரீட்சை தொடர்பான ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

(எ-ரி)

## தவறிவிட்டன

மு.சிவகுமாரின் சாரதி அனுமதிப் பத்திரம், S.மரியரட்ணம் என்பவரின் பெயாலுள்ள இன்சூரன்ஸ், ரக்ஸ் என்பன28-06-2003 அன்று சாவகச்சேரிக்கும் அச்சுவேலிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஐங்கரன் வீடியோ விஷன், கண்டி றோட், ஐயாகடைச்சந்தி, மீசாலை எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (30-32-12-18) (19700)

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் புகழ்பெற்று வரும் நிறுவனமாகிய பிள்ளையார் ஸ்ரோர்ஸில் வேலைசெய்வதற்கு வேலையாள்கள் தேவை.

உடன் தொடர்பிற்கு:

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ். (P.V.T)**

31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(19705) (30-32-12-18)

## ஆவரங்காலில் கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூலை1

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் கல்விக் கண்காட்சி இன்று காலை 9.30 மணிக்கு அதிபர் வே.பாலசுப்பிரமணியம் தலைமையில இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரமும் கலந்துகொள்வார். (எ-10)

## சுன்னாகம் றோட்டரக்ட் கழகம்

**Rtr.M.ஜெயகுமார் தலைமையிலான 9 ஆவது நிர்வாகசபை**

## பதவியேற்பு வைபவம்

இடம் : இராமநாதன் நுண்கலைப்பீட இசைத்துறை மண்டபம், மருதனார்மடம்.

காலம் : நாளை (02-07-2003) புதன்கிழமை பி.ப.3.00 மணி

பிரதமவிருந்தினர்: Rtn.N.சுரேந்திரன (தலைவர், யாழ்.றோட்டறிக் கழகம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(30-32-12-18) விழாக்குழு

(C28673) சுன்னாகம் றோட்டரக்ட் கழகம்.

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியர்களான திரு.கனகராஜா புஷ்பநாதன் திருமதி ஜெயந்தா முகுந்தன ஆகியோரின் அன்புத் தாயார்

**திருமதி குணபூரணம் கனகராஜா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய். (19701) (30-26-12-18) - பாடசாலைச் சமூகம்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கார்த்திகேசு நாகமுத்து (சின்னாச்சி)

உசனைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கார்த்திகேசு நாகமுத்து (சின்னாச்சி) அவர்கள் 28-06-2003 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தம்பையா - பொன்னார் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்பு மனைவியும் முருகேசு, காலஞ்சென்ற வினாசித்தம்பி மற்றும் முத்துப்பிள்ளை, சிவயோகநாதன், இராமநாதர் (கனடா) ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-07-2003) செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உசன் ஈச்சங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உசன்,* தகவல்:

*மிருசுவில். (19704)* (30-18-12) பிள்ளைகள்.

## திருமதி சிறீதரன் பரமேஸ்வரி

கட்டுடையைச் சேர்ந்த திருமதி சிறீதரன் பரமேஸ்வரி 28.06.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தயாராணி, தயாரஞ்சன், தயாபாலினி, உதயகுமார் ஆகியோரின் தாயாரும் குலசிங்கம், ஜெகதீஸ்வரி, ஜெயந்திக்குமார், துஷ்யந்தி ஆகியோரின் மாமியாரும் றஜனி, ராஜு, தாரணி, ஜனனி, சஜீவ், அகிலன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.06.2003 ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கட்டுடை,* தகவல்:

*மானிப்பாய்.* (19702) (30-26-18-17-12) உதயகுமார்(மகன்)

## குமாரவேலு அருளம்பலம்

புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு அருளம்பலம் அவர்கள் 29.06.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவேலு - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற அம்பிகைபாகன் - இலஷ்மிப்பிள்ளையின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும் அருள்மோகன் (நோர்வே), அருள்நீதன் (பிரான்ஸ்), விஜித்தா (சுவிஸ்), அருள்செல்வன் (பிரான்ஸ்), சுஜாத்தா ஆகியோரின் அன்புத் தந்தையும ராஜி (நோர்வே), சுமதி (பிரான்ஸ்), பாலேந்திரா (சுவிஸ்), லோஜிதா (பிரான்ஸ்), செல்வராஜா ஆகியோரின் மாமனாரும் அக்ஷாயினி, அபிலாஷன், அஜிவ்சஞ்சிவ், அஸ்வின், அபிரா, மாதுஷன், அபிஷன், கோபிகா, அக்ஷிகா, ஐங்கரஜித், பவதாரகா, அஸ்வின், தமிழரசி, துவாரகா ஆகியோரின் அன்புப் பேரனும் அன்னலெஷ்மி, நாகம்மா காலஞ்சென்ற நல்லம்மா மற்றும் கனகலிங்கம், கமலம், மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மனோன்மணி வாசா,* தகவல்:

*கொக்குவில் ஆடியபாதம் றோட்,*

*கொக்குவில் கிழக்கு.* (19698) (3026-12-18-17) மகேஸ்வரி(மனைவி).



அதிபோஷாக்கு மிக்க உன்னத பானம்

புரோவிநெக்ஸ் இல் 16 வகையான விற்றமின்களும் மேலதிக கனியுப்புக்களும் அடங்கியது.

PROVIN-X

- இழந்த சக்தியை விரைவாக மீட்டெடுத்தல்
- நோய்வாய்ப்பட்டோர் உடன் புத்துணர்வு பெற
- கண்பார்வை சக்தியை அதிகரித்தல்

மேலும் விளையாட்டு வீரர், கர்ப்பிணித்தாய்மார், வளரும் பிள்ளைகள், வயோதிபர் உட்பட முழுக்குடும்பத்துக்கும் ஏற்ற சிறந்த பானம்






*யாழ். முகவர்:* ஜெகன் பார்மஸி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 222 3191

*வன்னி முகவர்:* அகிலனிஸ் பார்மஸி (பிள்ளையார் மருந்தகம்) கிளிநொச்சி.

*இலங்கையில் சந்தைப்படுத்துவோர்:* ARKEM COLOMBO

T.P.: 470290, 075 344436

E-mail: arkem@sltnet.lk

(30-12-18) (சி-28675)

**PROVIN - X** *தற்போது அனைத்து முன்னணி பார்மஸிகளிலும் பிரதான கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.*

# சத்தியராஜின் பிணை மனு ஜூலை 4இற்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு புதூர் பிரதேச விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் ரி.சத்தியராஜின் (சுபராஜ்) பிணை மனு தொடர்பான வழக்கு எதிர்வரும் 4 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

கொலைக் குற்றச்சாட்டுத் தொடர்பாக தேவநாயகம் சத்தியராஜ் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு நீதிவானால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இவரது பிணை மனு ஏற்கனவே ஜூன் 20 ஆம் திகதி கிழக்கு மேல் நீதிமன்ற மட்டக்களப்பு அமர்வின் போது எடுத்துக்கொள்ளப்பட்டது.

மீண்டும் ஜூன் மாதம் 27 ஆம் திகதி திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.பரமராஜா முன்னிலையில் இது விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மேற்படி பிணை மனு தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து எவ்வித அறிவித்தல்களும் தனக்குக் கிடைக்கவில்லை என அரச தரப்பு வழக்கறிஞர் எஸ்.எம்.ஹமிம்டீன் நீதிமன்றில் தெரிவித்தார்.

அதனால் பிணை மனு தொடர்பான வழக்கைத் தள்ளிப்போட வேண்டியேற்பட்டது.

எனினும், மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி காசிநாதர் சிவபாலன் குறுகிய காலத் தவணை தரும்படி வேண்டுகோள் விடுத்ததை அடுத்து பிணை மனு மீதான வழக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.பரமராஜா அறிவித்தார்.

## மிதிவெடிகுறித்து கருத்தரங்கு

கைதடி,ஜூலை1

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன், சர்வோதயம் நடத்தும் மிதிவெடி சம்பந்தமான அபாயக் கல்வித் திட்டக் கருத்தரங்கு நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. (எ-75)

அம்பாறை மாவட்டம்

# கரையோரப் பிரதேச கச்சேரிக் குழப்பம்!

## அதாவுல்லாவால் கூட்டம் நடத்த முடியவில்லை

கல்முனை,ஜூலை1

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கரையோரப் பிரதேசத்தை தனி மாவட்டமாக்கி கல்முனையில் அதற்கான கச்சேரியை அமைப்பது தொடர்பாகக் குழப்பநிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால், கடந்த வெள்ளிக்கிழமை ஹரீஸ் எம்பியின் சொந்த ஊரான கல்முனைக்குடியில் அமைச்சர் அதாவுல்லா நடத்த முனைந்த கூட்டத்தை முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஹரீஸின் ஆதரவாளர்களின் கடும் எதிர்ப்பு காரணமாக நடத்த முடியாமல் ரத்துச்செய்து விட்டுத் திரும்பிச்செல்ல வேண்டியதாயிற்று.

ஹரீஸ் எம்பியின் முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கைக்கு எதிராக குடியிருப்புப் பிரதேசங்களை மட்டும் உள்ளடக்கிய கரையோரப் பிரதேச மாவட்டம் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துமாகையால் அப்படியான ஒரு மாவட்டமோ அதற்கு ஒரு கச்சேரியோ தேவையில்லை என்று வாதிட்டு வருகிறார் அமைச்சர் அதாவுல்லா.

கரையோரப் பிரதேசத்தில் உள்ள கல்முனையில் மேலதிக கச்சேரி ஒன்றை அமைப்பது சம்பந்தமாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சரின் ஆலோசனைக்கு அமைய அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு அம்பாறை அரசாங்க அதிபர் எல்.எஸ் சிறிவர்த்தன கடந்த வியாழக்கிழமை ஆலோசனைக் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

அந்தக் கூட்டத்தை அமைச்சர் அதாவுல்லா நடைபெறாமல் செய்துவிட்டார் என்று அவர் மீது குற்றம் சாட்டப்படுகிறது. பலர் கடும் சினம் கொண்டிருக்கிறார்கள். இதை அடுத்து அடுத்தநாள் கல்முனைக்குடிக்கு அமைச்சர் அதாவுல்லா சென்று தமது நிதி ஒதுக்கீட்டில் கல்முனைக் கடற்கரைப் பள்ளிவாசல் வீதிப் புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்து வைத்தார்.

அதை அடுத்து பொதுக் கூட்டம் நடத்தமுனைந்த போதே பிரச்சினை எழுந்தது. பொதுக் கூட்டத்திற்கு முன்னதாக அமைச்சர் அதாவுல்லா தங்கியிருந்த வீட்டைச் சூழ்ந்துகொண்ட இருபதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் அதாவுல்லா கல்முனைக் குடியை விட்டுச் வெளியேறுமாறு கோஷம் எழுப்பினர்.

'அம்பாறை மாவட்ட கரையோரக் கச்சேரியை கல்முனையில் அமைப்பதை எதிர்த்து வருகின்ற அதாவுல்லாவே இங்கிருந்து வெளியேறு',

'அமைச்சரவை அந்தஸ்திற்காக முஸ்லிம் காங்கிரசைக் கூறுபோட்ட துரோகியே வெளியேறு',

'அஷ்ரப்பின் கனவான கரையோர மாவட்டத்தைத் தேவையில்லை என்று கூறுகின்ற உமக்கு இங்கு என்ன வேலை?'

என்பன போன்ற கோஷங்களை உரத்த குரலில் ஓங்கி ஒலித்தனர். துண்டுப்பிரசுரம் ஒன்றும் அங்கு விநியோகிக்கப்பட்டது.

இவற்றால் சற்று நேரம் அங்கு பதற்றம் நிலவியது. அதாவுல்லா - ஹரீஸ் அதரவாளர்களிடையே முறுகல்நிலை தோன்றியது. இதனால் கல்முனை பொலீஸார் கூட்டத்தை ரத்துச் செய்ததுடன் அமைச்சரை பத்திரமாக அழைத்துச் சென்றனர். அதனால், அசம்பாவிதம் எதுவும் இடம்பெறவில்லை. (எ)

## வட்டுக்கோட்டையில் பணிநயப்பு விழா

வட்டுக்கோட்டை,ஜூலை1

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் அதிபராய் இருந்து ஓய்வு பெற்ற வி. சிவஞானபோதனின் பணிநயப்புவிழா நாளை புதன்கிழமை பி.ப. 3மணிக்கு கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் சிரேஷ்ட மாணவத் தலைவன் யோ. அருட்செல்வம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வாழ்த்துரைகளை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனும், பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி.சுந்தரசிவம், கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையா, காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் சி.பரமசிவம், மிருசுவில் றோ.க.த.பாடசாலை அதிபர் எவ். அன்ரன் ஆகியோரும் வழங்குவர். (எ-160)

# பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு கீழான 2 வழக்குகள் வாபஸ்; இருவர் விடுதலை

திருகோணமலை,ஜூலை1

1991, 1992 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட இரண்டு சந்தேகநபர்கள் மீதான வழக்குகள் வாபஸ் பெறப்பட்டு எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மேல் நீதிமன்றத்தின் திருகோணமலை அமர்வில் இடம்பெற்றது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின கீழ் குற்றம் சுமத்தப்பட்ட இருவர் மீதான குற்றப் பத்திரிகைகளை அரச வழக்கறிஞர் வாபஸ் பெற்றதையடுத்தே கிழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி எஸ். பரமராஜா எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

மேற்படி சம்பந்தப்பட்ட இரண்டு வழக்குகளையும் அதாவது எதிரிகள் மீதான குற்றப்பத்திரிகைகளை சட்டமா அதிபரின் ஆலோசனையின் கீழ் வாபஸ் பெறுவதாக அரச தரப்பு வழக்கறிஞர் எஸ்.எம்.ஹமீல்டீன் நீதிமன்றில் தெரிவித்ததை அடுத்தே எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

மேற்படி விடுதலை செய்யப்பட்ட இரு வழக்குகளில் ஒரு வழக்கு 1991.09.01இற்கும் 1992.12.31இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் விடுதலைப் புலிகளிடம் மணலாறு பகுதியில் ஆயுதப் பயிற்சி பெற்றதாக அந்தோனி சகாயமேரி (ஜயதேவி - திருகோணமலை) என்பவர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு பத்தாவது தடவையாக கடந்த செவ்வாய்க்கிழமை விளக்கத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது வழக்கு 10.01.1992 இற்கும், 31.12.1992இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் திரியாய் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றதாகக் குற்றம் சாட்டப்பட்டதை அடுத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவர்கள் தொடர்பான விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட மேலதிக நீதிமன்ற நீதிபதி எஸ்.பரமராஜா எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார். எதிரிகள் தரப்பில் சட்டத்தரணிகளான எம்.ஏ.ஏ.சாலிஹ், எஸ்.புலேந்திரன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். (எ)

# சமராடும் முனையில் உயிர்காக்கும் பணி

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மருத்துவப் பிரிவு இன்று விரிவுபெற்று வளர்ச்சி கண்டிருக்கிறது. மருத்துவப் போராளிகள் பல பேர் இந்தப்பிரிவில் தீவிர பங்காற்றியிருக்கின்றனர்.

....குண்டுகள் வீழும் போர்க்களத்தில் தங்கியிருந்து ஒரு சத்திரசிகிச்சைக் கூடத்தை இயக்குவது என்பது எத்தகைய கடினமான பணி.

தனது கள அனுபவங்களினை 'சமரும் மருத்துவமும்' என்ற பெயரில ஒரு தொகுப்பு நூலாக வெளியிட்டிருக்கின்றார் மருத்துவப் போராளி தூயவன்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட அந்த நூலிலிருந்து ஒரு பகுதியை நன்றியுடன் இங்கு பிரசுரிக்கின்றோம்.

**10**.11.1993 அன்று நடுநிசி, இருளுடன் கடுமையான குளிர்காற்று உடலை ஊடுருவிச் செல்வதை உணர்கிறேன். பாரம் கூடிய நீர்த்துளிகள் என்மேல் விழுந்து தெறிக்கின்றன. எனது பாதணிகள் நிலத்தில் புதைவதை உணர்கிறேன். முன்னால் வழிகாட்டிச் செல்பவரின் உதவியுடன் வேகமும் எனக்கும் கைகொடுக்கிறது. இது ஒரு தென்னந்தோப்பு என்பதைப் புரிய முடிகின்றது.

திடீரென என் முன்னால் சாக்குப் படங்கு ஒன்று தொங்குவதைத் தொட்டுத் தெரிந்துகொண்டேன். அதை விலக்கிச் செல்ல இன்னுமொரு சாக்குப் படங்கு தட்டுப்பட்டது. அதையும் விலக்கிய போது, கண்ணைப்பறிக்கும் மின் ஒளியூட்டிய ஒரு கொட்டகையினுள் நான் நின்றேன். இவ்வொளியின் ஒரு கீற்றுக் கூட வெளியே தெரியவில்லையே! ஆம், அப்படியொரு ஒளிக்கீற்றுகூட வெளியில் தெரியுமானால் நாம் அங்கிருப்பது சாத்தியமாகாது. எனக்கும் இது முதலனுபவம்.

வெள்ளாடை அணிந்தவண்ணம் பிரதான மருத்துவர்களும் வேறு சிலரும் நோயாளியைச் சுற்றி நின்று சிகிச்சை செய்வதைத்தான் தெரிந்திருந்தேன். அப்பா கதிரால் அச் சத்திர சிகிச்சை அறை தொற்று நீக்கப்பட்டிருக்கும். எதுவித வேறுபாடு, இடையூறுகளும் இருக்காது பணி நிதானமாக நடைபெறும். ஆனால், இங்கு சுற்றிவர மனற்பெட்டைகள் அடுக்கப்பட்டுள்ளன. ஆயினும், ஒரு பக்கம் மேசையொன்றில் மருத்துவப் பொருள்கள் சீராக அடுக்கப்பட்டுள்ளன. தரையில விரித்திருக்கும் பாய்களைக் கொண்டு இவ்விடம் ஒரே தடவையில் நாற்பது பேரைக் கவனிக்கக் கூடியதாக இருக்கும் என்பதை விளங்கிக் கொண்டேன். நேராக இரண்டு பக்கமும் சுமார் 8 அடி உயரத்தில் கட்டப்பட்டிருக்கும் கயிறு அங்கு சிகிச்சைக்காக வருபவர்களுக்கு திரவ ஊடகம் அவசியம் ஏற்றவேண்டியிருக்கும் என்பதை உறுதிப்படுத்தியது.

அங்கு நிற்கும் ஒவ்வொருவரினதும் முகத்தைப் பார்க்கின்றேன். எல்லோரிடத்திலும் ஓர் அமைதி நிலவுகிறது. ஆனால், அவர்களின் கண்கள் எதையோ வினவுவது போல இருக்கிறது. எத்தனையோ களங்களின் அனுபவத்தைப் பெற்ற இவர்கள் எதையும் கதைக்காதது எனக்கு வியப்பளிக்கவில்லை. ஏனெனில்,

இவர்கள் செயல் வீரர்கள்.

சாமம் இருள் வடிவில் கழிகிறது.

எல்லோரும் பர பரப்பாகின்றார்கள்.

ஏதோவொன்றை அவர்கள் தெரிந்துவிட்டார்கள். நானும் அவர்களுடன் இணைகிறேன். துப்பாக்கிச் சத்தங்களும் பாரிய குண்டு வெடிப்புச சத்தங்களும் தூரத்தில் கேட்கின்றன. "சண்டை தொடங்கிவிட்டது.... சண்டை தொடங்கிவிட்டது....." எல்லோர் வாய்களும் முணுமுணுக்கின்றன.

வாகனம் நாம் இருக்கும் கொட்டிலின் முன் வந்து பிறேக் அடித்து நிற்கிறது. 'விலகு...... விலகு...... என்ர அம்மா...... ஐயோ என்ர அம்மா......' எனக் கேட்கும் குரல்கள் என்னை ஒருகணம் உலுப்பியது. முன்னிருந்த சாக்குப் படங்கு விலக காயப்பட்ட போராளிகளைத் தூக்கிக்கொண்டு உள்ளே விரைந்து வந்து கிடத்துகிறார்கள். இரத்த மணம் வீசுகிறது. அவர்கள் வேதனையால் முனகும்போதும் நடமாடல்களின்போது ஏற்படும் காலடிச் சத்தமும் அவ்விடத்தின் சூழலை முற்றாக மாற்றி விடுகிறது. ஒவ்வொரு போராளியாக பிரதான மருத்துவர் வேகமாகக் கவனிக்கிறார். நாடித் துடிப்பையும் காயங்களின் தன்மையையும் கவனித்து, யாருக்கு முதலில் அவசர சிகிச்சை செய்யவேண்டும் என முடிவெடுத்து, அவர் செயற்படத் தொடங்குகின்றார். எல்லோரும் இயங்குகின்றார்கள்.

காயக்காரர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இட நெருக்கடி ஆயினும், எவரும் நிதானம் இழந்ததாயில்லை. காயமடைந்த போராளிகளின் வேதனைக் கதறலைக் கேட்டும் தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்தாமல் பணி தொடர்கிறது.

பிரதான மருத்துவர் என்னை அழைக்கிறார். மயக்க நிலையில் இருக்கும் போராளி ஒருவரைப் பார்த்த வணணம் முயற்சி செய்வம் என்ற படியே செயற்கை சுவாச முறைகளைச் செய்யும்படி பணிக்கிறார். நான் முழங்காலில் இருந்தபடி கைகளை நெஞ்சில் வைத்து அழுத்தம் கொடுக்கிறேன். இன்னொரு போராளியும் செயற்கைச் சுவாசம் கொடுக்கிறான்.

அப்பொழுது எனது பாதத்தில் யாரோ தட்டுவதுபோல் உணர்ந்து



திரும்புகின்றேன். "அண்ணா, தண்ணி தாங்கோ.... ஐயோ தண்ணி தாங்கோ...." இன்னுமொரு காயமடைந்த போராளியின் குரல் என் இதயத்தைப் பிழிகிறது.

ஆனால், "ஒப்பிரேசன் செய்யிறதென்றால் தண்ணீர் கொடுக்கக்கூடாது" என்ற கட்டளை என்னைத் தடுக்கிறது. ஏனோ என்மனம் அந்தரிக்கிறது.

எனது பாதத்தைத் தடவியபடியே அந்தப் போராளி தண்ணீர் கேட்கிறான். இன்னுமொரு போராளி இதயமும் இயங்காமல் சுவாசமும் இல்லாமல் கிடக்கிறான்.

உயிர்..... உயிர் எவ்வளவு உன்னதமானது! பிரதான மருத்துவர் அப் போராளியின் கண்ணிமையைப் பார்த்துவிட்டுத் தலையாட்டுகின்றார். "பிறெயின் டெத்தாயிட்டுது" எனக்கூறி விலகுகின்றார். ஏதோ நினைவு வந்தாற்போல பின்னால் திரும்பி, தண்ணீர் கேட்ட போராளியைப் பார்க்கிறேன். இன்னுமொரு மருத்துவர் அவனது நாடித் துடிப்பைச் சோதித்துவிட்டு, கண்ணிமையையும் விரித்துப் பார்த்து விட்டு விலகுகின்றார்.

"ஐயோ....." என்று கத்த வேண்டும்போல் இருக்கிறது.

அப்போது யாரோ எனது முதுகில் தட்டிக் கொடுப்பதை உணர்ந்து திரும்பினேன். அங்கு நின்ற பொறுப்பாளர் என்னைப் பார்த்து,

"ஒன்றுக்கும் கலங்காதே.இனும் நாம் கடக்க வேண்டிய பாதை இதைவிடக் கடுமையானதும்..... உம் கடமையைத் தொடரும்....." எனப் பணிப்பது போல உணர்கிறேன். மனச்சுமையிலிருந்து விடுபட்டு, இன்னுமொரு காயமடைந்த போராளிக்குச் சிகிச்சை செய்யத் தொடங்குகிறேன்.

மரணத்தைக் கண்டு பதற்றப்படுவதல்ல...... அந்த பிடியிலிருந்து மனிதர்களை மீட்பதுதானே எங்கள் தளராத பணி? அதில் ஆழ்கிறேன். *

# வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை முறைகள்

பொருளாதார ரீதியில் இலாபத்தையும் உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்காத காய்கறிகளையும் பெற இலகுவானவழி வீட்டுத்தோட்டச் செய்கையாகும். இந்த வீட்டுத்தோட்டச் செய்கையின் அடிப்படைகளைக் கடந்த வாரத்துக்கு முன்னர் இரு வாரங்கள் 'கமமும் புலமும்' பகுதியில் பார்த்தோம்.

சில இலைக்கறிப்பயிர்கள் தொடர்பாக இன்று பார்ப்போம்.

### இலைக்கறிகள்

இலைக்கறிகள், கனிப்பொருள்கள் (குறிப்பாக இரும்புச் சத்து) நிரம்பியதாகவும், உயிர்ச்சத்து ஏ, சி ஆகியவற்றைக் கொண்டதாகவும் காணப்படுகின்றன. அதனால் திடகாத்திரமான வாழ்வுக்கு அத்தியாவசியமான உயிர்ச்சத்துக்கள், கனிப்பொருள்கள ஆகியவற்றைப் பெறுவதற்கு உங்கள் நாளாந்த உணவில் ஓர் இலைக்கறியைச் சேர்த்துக்கொள்வது அவசியமாகும்.

### பசளி

பசளியில் பச்சை, சிவப்பு என இரு இனங்கள் உண்டு. இரு இனங்களும் ஒரேயளவு போசாக்குச் சத்தைக் கொண்டன. எனினும், சிவப்பு இனங்கள், பச்சை இனங்களைவிட கூடுதலான விளைவைக் கொடுக்கின்றன.

ஒவ்வொரு நிலையத்திலும் 2 - 3 விதைகளை நாட்டி, பின் அவை முளைத்து 3 - 4 இலைப் பருவமாக வரும்போது, ஒவ்வொரு நிலையத்திலும் ஒரு கன்றை விட்டு, மிகுதியை அகற்றவும். 30x30ச.மீ. இடைவெளி சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

நடுகையின் முன் மேடைகளுக்குப் போதியளவு சேதனப்பசளை பிரயோகிக்கவும், அத்துடன், நடுகையின்போது, ஒவ்வொரு நிலையத்திற்கும் இலைக்கறிகளுக்கான உரக் கலவையில் 3 - 4 தேக்கரண்டி பிரயோகிக்கவும். நட்டு 3கிழமைகளின் பின் அதே உரக்கலவையை அல்லது யூரியாவை அதேயளவில் பிரயோகிக்கவும்.

**கமமும் புலமும்**

நட்டு 2மாதங்களில், நில மட்டத்திலிருந்து 10-15ச.மீ. உயரத்தில் பசளியை அறுவடை செய்யலாம். அதனைத் தொடர்ந்து முளைத்துவரும் பக்கக் கிளைகளை 20நாள்களில் அறுவடை செய்யலாம். மூன்றாவது அறுவடையை 20நாள்களுக்கு முதலே மேற்கொள்ளலாம். அதன்பின் விளைவு வீழ்ச்சி அடைவதால், பயிர்ச்செய்கையை மீண்டும் ஆரம்பிப்பது நன்று.

### அகத்தி

இப்பயிர்களை முதல் 6வாரங்கள் வரை சாடிகளில் வளர்த்து அதன்பின் தோட்டத்தில் நாட்டலாம். ஒரு சராசரிக் குடும்பத்திற்கு 2-3 மரங்கள் போதுமானதாகும். 2½ மீற்றர் இடைவெளியில் குழிகளைத் தயாரித்து போதியளவு சேதனப்பசளை பிரயோகிக்கவும். மரங்கள் ஒருவருடவயதை அடையும்போது கத்தரிப்பதன் மூலம் ஒழுங்காக இலைகளையும், பூக்களையும் அறுவடை செய்யலாம். இலைகளை வறை சமைக்கவும் பூக்களை சலாட்டாகவும பயன்படுத்தலாம் அல்லது சமைத்து உண்ணலாம்.

இலையரி புழுக்கள் இருக்குமானால் அவற்றைக் கையினால் பொறுக்கி அழிக்கவும்.

### முருங்கை

இப்பயிரை 3.5.ச.மீ விட்டமுள்ள, 1½ மீற்றர் நீளமுள்ள முருங்கைத் தடிகள் மூலம் இனப்பெருக்கலாம். இவற்றை 2½ - 3½ மீற்றர் இடைவெளியில் நடவும். ஒரு வருடத்தில் காய்க்க ஆரம்பிக்கும். முருங்கைக் காய்களுடன், இதன் இலைகளும் போசாக்குள்ள உணவாகப் பயன்படுகிறது.

### கீரை

கீரையில் பச்சை, சிவப்பு என இரு வகைகள் உண்டு. இளம் பச்சை இலைகளுடன் உயரமாக வளரும் இனங்களே பயிர்ச்செய்கைக்கு உகந்தவை.

விதைகளை 30ச.மீ. இடைத் தூரமுள்ள வரிசையில் 5மி.மீ. ஆழத்தில் விதைக்கவும். முளைப்பது ஒழுங்காக இல்லாததினால் வரிசையில் 15ச.மீ. இடைவெளி வழங்கிப் பயிர்களை ஐதாக்கவும்.

நட்டு 3-4 வாரங்களின் பின் பயிர்கள் 30.ச.மீ உயரமாக இருக்கும் போது அறுவடையை ஆரம்பிக்கலாம்.

### • பொன்னாங்காணி

இது மிகவும் விரைவாக வளரக்கூடிய இலைக்கறியாகும். 15ச.மீ. நீளமான தண்டுகளை 30ச.மீ.இடைவெளியில் நடவும்.

### கங்குன்

நீர் தேங்கும் இடங்களில் இந்த இலைக்கறி சிறப்பாக வளரும். 20ச.மீ. நீளமான தண்டுத் துண்டங்களை வரிசைகளுக்கிடையில் 45 ச.மீற்றரும் வரிசையில் 30ச.மீற்றரும் வழங்கி நடவும். பயிர்கள் நில மட்டத்திற்கு மேல் படர்ந்து வளர்வதினால், இளம் இலைகளையும் தண்டுகளையும் இடையிடையே அறுவடை செய்யவும்.


### கொகில

நடுகைக்கு இளங் குருத்துக்களைத் தெரிவுசெய்யவும். நீர் தேங்கும் இடங்களில் இவற்றைப் பயிரிடுதல் வேண்டும். உரப்பசளை பிரயோகிக்க வேண்டிய அவசியமில்லை. இளந்துளிர்கள் உருவாகும்போது அவற்றை அறுவடை செய்யலாம். தண்டுகள் ஏறக்குறைய 30.ச.மீ. உயரமாக வரும்போது வெட்டலாம். ★

# அதிக வருமானம் ஈட்டுவதற்கு வல்லாரை பயிரிடுங்கள்

### பயிர்ச் செய்கை

வல்லாரை, மக்களால் விரும்பப்படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. விசேடமாக எமது முன்னோர்கள் இதில் அடங்கியுள்ள ஆயுர்வேத மூலிகைத் தன்மைக்காக முக்கிய கவனமெடுத்துள்ளனர். மூக்கிலிருந்து சளி, நீர் வடிதலை முற்றாக இல்லாமல் செய்து பீனிசம் என்னும் நோயிலிருந்து காக்கும் மூலிகையாக இது விளங்குகின்றது. கண்பார்வையை கடைசி வரையில் நல்ல நிலையில் வைத்திருப்பதற்கு இது மிகவும் பயனுள்ளதாகின்றது. அன்றாட உணவில் சேர்த்துக்கொள்ளக் கூடிய கீரை வகையாகவும் எமது சிந்தனா சக்தியைப் பெருக்குவதற்கும் வல்லாரை சிறந்த ஒரு மருந்



தாகவும் அறியப்பட்டுள்ளது. மேலும் எமது உடலின் உஷ்ணத்தைக் குறைப்பதற்கும் இது மிகவும் பயனுள்ள ஒன்றாகும்.

இதனால் உள்ளூர் சந்தைகளில் இது மிகவும் கிராக்கியான ஒன்றாகியுள்ளது. இப்பொழுது யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளில் விவசாயிகள் தமது தோட்டங்களில் ஊடு பயிராகவும், வீட்டுத்தோட்டம், விவசாய நிலங்கள் போன்றவற்றில் உள்ள சிறு இடங்களையும் பயன்படுத்தி நல்ல இலாபத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். இன்றைய சந்தைகளில் வல்லாரைக்கு நல்ல கிராக்கி உள்ள நிலையில் ஒரு பிடி 5 ரூபா முதல் 10 ரூபா வரை நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

தேசிய அடிப்படையில் பயிரிடப்படும் வல்லாரை பெரும் வல்லாரை, சிறு வல்லாரை என இரு வகைப்படும். இவை இரண்டும் ஒரே வர்க்கத்தைச் சார்ந்தவையேயாகும். பெரும் வல்லாரை சப்ரகமுவ பிரதேசத்தில் அகன்ற வல்லாரை என அழைக்கப்படுகின்றது. இதன் இலைகள் வட்டவடிவாக இருப்பதோடு நெளி நெளியான கரைகளைக்கொண்டு சிறுசிறு பற்றைகளாக வளரும் தன்மை உடையவை.

சிறு வல்லாரையும் இதன் இலைகளைப் போன்றே அமைந்திருந்தாலும் அளவில் சிறியனவையாகவும் கொடிபோல் படர்ந்தும் செல்லும். இதில் பூவும், சிறு காய்களும் தோன்றும். சிறு வல்லாரையின் முக்கியத்துவம் என்னவென்றால் அதிக போஷாக்கு அடங்கியுள்ளமைதான். சாதாரணமான வல்லாரையில் இரும்புச்சத்து விட்டமின்களை 'A', 'B' யோடு உடலுக்குத் தேவையான இரசாயனப் பதார்த்தங்களும் அடங்கியுள்ளன. எவ்வாறாயினும் உங்களால் முடிந்த வேளைகளில் வல்லாரையைப் பச்சையாகச் சாப்பிடுவதன் மூலம் நல்ல பலனைப் பெற்றுக்கொள்ளமுடியும். தற்போதைய நவீன சந்தைகளில் விதமான பெயர்களிலும் வடிவங்களிலும் தேநீர் போன்றும் சூப் வகைகளாகவும் கஞ்சியைப் போன்று செய்து உண்ணவும் பல வகைகளில் விற்பனை செய்யப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. நல்ல விற்பனையும் உள்ளது.

## நவீனசந்தைகளில் அதற்கு நல்ல கிராக்கி

மேலே கூறப்பட்ட காரணங்களை விடவும் இன்னும் பல பயன்கள் பல கொண்டதால் வல்லாரை சந்தையில் அதன் தேவை மேன்மேலும் பெருகி வருகிறது. ஆகவே, வல்லாரையைப் பயிர் செய்வதன் மூலம் குறைந்த சிரமத்தின் செலவின் மத்தியில் நல்ல இலாபத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பது கண்கூடு. ◆



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.தென்மேற்கு பிரதேச சபை வளவில் வலி.தென்மேற்கு சனசமூக நிலையங்களின் சமாசப் பிரதிநிதிகள் மரக்கன்று நடுவதைப் படத்தில் காணலாம்.

அருகில் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஸ்ணசாமியும் காணப்படுகிறார். (எ-18)

டோக்கியோ நிதியைக் கொண்டு

# புலிகளின் ஆலோசனைப்படி வடக்கு - கிழக்கு அபிவிருத்தி

## சீனக்குடாவில் அமைச்சர் பீரிஸ்

சீனக்குடா,ஜூலை1

"டோக்கியோவில் இடம்பெற்ற உதவி வழங்கும் மாநாட்டில் பெறப்பட்ட நிதியைக்கொண்டு வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கான சீரமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்புடனும் ஆலோசனைகளுடனுமே மேற்கொள்வோம்".

- இவ்வாறு அரசியல் விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

சீனக்குடா கொட்பே டோக்கியோ சிமெந்து ஆலைப்பகுதியில் - சிமெந்து பதனிடும் இயந்திரத்தொகுதியை ஆரம்பித்து வைத்து பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் பீரிஸ் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுக்களில் தற்போது தடங்கல்கள் ஏற்பட்டது தற்காலிகமானதே. விடுதலைப் புலிகள் மீண்டும் பேச்சுக்கு முன் வருவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

மேலும் டோக்கியோ சிமெந்து ஆலை நிறுவனம் பெரும் பொருள் செலவில் சிமெந்து பதனிடும் இயந்திரத்தொகுதி ஒன்றையும் உற்பத்தி செய்யப்பட்ட சிமெந்தை விநியோகம் செய்வதற்கும் நவீன வழிமுறைகளைக் கையாண்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் தரமான சிமெந்தினை மக்கள் பெற்றுக்கொள்ளமுடியும்.

-இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ரோஹித போகொல்லாகம சிமெந்துப் பொதிகளை ரயில் பெட்டிகளில் ஏற்றும் இயந்திரத்தொகுதியினை ஆரம்பித்து வைத்தார்.

டோக்கியோ சிமெந்து ஆலையின் தலைவர் ஏ.வை.எஸ். ஞானம், இணை முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.ஆர்.ஞானம், பொதுமுகாமையாளர் சி.கிறிஸ்டோபர், பெர்னாண்டோ, திருகோணமலை அரச அதிபர் என்.பீ.கே.நெலும்தெனிய, ஆலை முகாமையாளர்களான பி.என்.ஜி.பண்டார, எம்.ரவீந்திரகுமார் ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டனர். (எ)

# தமிழீழ வரலாறு சிற்பங்களாக கிளிநொச்சியில் வடிவமைப்பு

கிளிநொச்சி,ஜூலை1

தமிழீழத்தின் வீரவரலாற்றைச் சித்திரிக்கும் சிற்பக்கலைக்கூடம் ஒன்று கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ளது.

லெப்டினட் கேணல் தூயவன் நினைவாக அமைக்கப்பட்டுள்ள இந்தக் கலைக்கூடத்தில் தமிழர்களின் வீரம் செறிந்த பல வரலாற்றுச் சம்பவங்கள் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாகக் கலைக்கூடத்தின் இயக்குநர் சிற்பஞானி செ.விக்னேஸ்வரநாதன் 'உதயனுக்கு' தெரிவித்ததாவது:-

சிற்பக்கலையானது தமிழீழத்திற்கே உரித்தான தனித்துவக் கலையாகும். இதன்மூலம் தமிழர் வீர வரலாறுகள் எதுவித மிகைப்படுத்தலும் இன்றி இந்தக் கூடத்தில் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. இந்தச் சிற்ப வேலைகள் கடந்த 1991ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

கிளிநொச்சி, கூழ்ப்போக்குச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள மேற்படி லெப்கேணல் தூயவன் சிற்பக்கலைக் கூடம் தமிழர் வீரவரலாற்றினைப் பறைசாற்றும் நிலையமாக அமைந்துள்ளது.

இந்தக் கூடத்தில் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் பங்கு கொண்ட திருநெல்வேலித் தாக்குதல் மற்றும் மாங்குளம் தாக்குதல், 'ஜயசிக்குறு' முறியடிப்புச்சமர், கட்டுநாயக்கா விமான நிலையத் தாக்குதல் உட்பட பல தாக்குதல் சம்பவங்களும் -

வங்கக்கடலில் காவியமான கேணல் கிட்டு மற்றும் தியாக தீபம் திலீபன், அன்னைபூபதி ஆகியோரின் உருவங்களும் இந்த நிலையத்தில் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. (எ-10-ரி)



ஊர்காவற்றுறை மக்கள் வங்கியினால் காரைநகர் மத்தி மாதர் கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்களுக்கு சுயதொழில் முயற்சிக் கடன் வழங்குவதற்காக அண்மையில் அங்கு நடமாடும் சேவை ஒன்று நடத்தப்பட்டது.

அந்த நிகழ்வில் மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.சற்குணபாலன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

காரை மத்தி கிராம சேவையாளர் எஸ்.கே.சிவலிங்கம், மாதர் சங்கத் தலைவி திருமதி எஸ்.தர்மலிங்கம் மற்றும் சுயதொழில் முயற்சிக்கடன் பெற்ற சங்க அங்கத்தவர்களும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்:- காரைநகர் செய்தியாளர்.)*

# விளையாட்டு நிகழ்வுகள்

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடையே கரும்புலிகள் தினத்தையொட்டி நடத்தப்படும் உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

பிற்பகல் 2.30 மணி - செம்பியன் வி.க. எதிர் ஓடுமீன் வி.க.

பிற்பகல் 3.30 மணி - சக்திவேல் வி.க. எதிர் அருணோதய வி.க.

★ ★ ★

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகள் விளையாட்டுப் போட்டியில 4ஆம் நிலை மெய்வன்மைப் போட்டிகள இன்று செவ்வாய்க்கிழமை காலை 8மணிக்கு திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன.

இப்போட்டிகளில் இலங்கை மெய்வன்மைச் சங்கத்தைச்சேர்ந்த4 சிரேஷ்ட மெய்வன்மை மத்தியஸ்தாகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

எதிர்வரும் 4ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிநிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாண உதவிப் பிரதம செயலாளர் கே.மகாலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். இந்நிகழ்வுகள் மாகாணக்கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ளன.

(ஓ-10)


## வேலை வாய்ப்பு

Computer Typist

மாதச்சம்பளம் திறமைக்கு ஏற்ப ரூபா **4000.00** இருந்து

05-07-2003 சனி 9.00-12.00

நேரில் சான்றிதழுடன் வருக

**சுந்தர் வெளியீடு**

344,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

(கோயில்வீதிச்சந்திக்கருகாமை)


## சுவிஸிலிருந்து உதைபந்தாட்ட அணி

சுவிற்ஸர்லாந்தில் வாழும் ஈழத் தமிழர்களைக் கொண்ட உதைபந்தாட்ட அணியொன்று சுற்றுலாவை மேற்கொண்டு கிளிநொச்சி வருகின்றது.

தமிழீழ விளையாட்டுத்துறையின் அழைப்பை ஏற்று சுவிற்ஸர்லாந்தில் இருந்து வரும் அணி எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை வடக்கு -கிழக்கு மாகாணத்தில் உள்ள உதைபந்தாட்ட அணிகளுடன் ஆட்டங்களில் பங்கேற்கவுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள அணிகளுடன் இந்த அணி விளையாடவுள்ளது என தமிழீழ விளையாட்டுத்துறை அறிவித்துள்ளது.

(ஓ-5-ரி)


## CHEMISTRY CENTRE (BRANCH)

432, Temple Rd. Jaffna.

★ வெளிமாவட்ட மாணவர் நலன் கருதி உடனடியாக ஆரம்பமாகிவிட்ட அலகுகள்

ORGANIC
INORGANIC
GENERAL
THERMO CHEMISTRY
Paper Class

By: அன்பழகன்

அட்சரகணிதம்
சிக்கல் எண்கள்
காவிகள்
சார்பு ஆர்முடுகல்(ஆப்பு)

By: ராஜன்

HEAT
ELECTRICITY
அலைகளும் அதிர்வுகளும்
வினா விடை

By: சிவலிங்கம்

★ அலகுகள் ஆரம்பிக்கப்படுவதால் இவ்வாரத்துடன் அனுமதிகள் நிறுத்தப்படுகின்றன.

★ ஒரே கட்டணத்துடன் எல்லா அலகுகளையும் கற்கலாம்.

(C/28571) (30-22-12-18)


## கண்ணீருடன்---



இசை நாடக, நாட்டுக்கூத்துக் கலைஞனும்,
எமது மன்றத்தின் மூத்த உறுப்பினரும், செயலவை
அங்கத்தவரும், நிர்வாக அலுவலகருமான
'கலைவாரித'

**அம்புறோஸ் ஜேக்கப் (அன்டர்சன்)**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆறாத் துயரடைந்தோம். அவரின் ஆன்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சி நிற்பதுடன், அவரது பிரிவினால் துயருறும் குடும்ப உறவுகள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.

-இயக்குநர், அங்கத்தவர்கள்
திருமறைக் கலாமன்றம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

**குறிப்பு: இன்று பிற்பகல் 4.00 மணியளவில் அவரின் பூதவுடல் எமது மன்ற கலைத்தூது மணி மண்டபத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்த்தப்படவுள்ளது. இந்நிகழ்வில் எமது மன்ற அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைத்து நிற்கின்றோம்.**

(C/28686) (30-29-12-18)

## மீள் கேள்வி அறிவித்தல்

காரைநகர் ப.நோ.கூ.சங்கத்தினால் நிர்மாணிக்கப்படுகின்ற புதிய கட்டடத் தொகுதிக்கு புதிதாக இரும்பினாலான சுருக்குக் கதவுகள் செய்யப்படவுள்ளன. மேற்படி துறையில் தகுதிவாய்ந்தவர்களிடம் பின்வரும் விவரங்களுக்கு ஏற்ப கூறு விலைகள் கோரப்படுகின்றன. கேள்விகள்யாவும் 7.7.2003 ஆம் திகதி 12 மணிக்கு முன்பாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பிவைக்கவும். கேள்விகள் யாவும் 8.7.2003 ஆம் திகதி காலை 10 மணிக்கு கேள்விச்சபை முன் திறக்கப்படும்.

| வேலையின் விவரம் | கூறுஒன்று | விலை |
|---|---|---|
| 3/4"X 1/4" தட்டை இரும்பு (6"இடை வெளி)18 கேஜ் தகடு, 2தடவை அன்ரி குறோசிவ 2தடவை பொருத்தமான தீந்தை 1 உள்பூட்டு 2வெளி இணைப்பு பூட்டு, கைபிடிகள், அத்துடன் சுவரில் பொருத்துதல் உட்பட | சதுரஅடி | ............ |

தலைவர்,
காரைநகர் ப.நோ.கூ.சங்கம்,
காரைநகர்.

(C/28680) (29)

## ஓராண்டு நினைவலைகள்

**அமரர் திரு. ஆறுமுகம் நவரட்ணம்**

(முன்னாள் பங்காளர், நவரட்ணம் அன்கோ, வென்ஜர் நோவுட் உரிமையாளர்)

மலர்வு 01.08.1907 உதிர்வு 11.07.2002

*உடலால் எம்மை விட்டுப் பிரிந்தாலும்*
*உணர்வால் எம்மோடு வாழும் எம் அன்புத்தெய்வமே!*
*ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள்*
*எம் நெஞ்சைவிட்டு நீங்காது ஐயா!*

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (01.07.2003) செவ்வாய்க்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பூஜையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

*நிறைஞ்சனாஸ் இரும்பகம்,*
*"இரத்தினவாசா"*
*200, புன்னாலை வீதி,*
*சங்கானை.*

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(C28688) (30-32-12-18)

## மரண அறிவித்தல்கள்

### அம்புறோஸ் ஜேக்கப(அன்டர்சன்)

பாஷையூரைச் சேர்ந்த முன்னாள் சீனோர் உத்தியோகஸ்தரும்,யாழ் திருமறைக் கலாமன்ற நிர்வாக அலுவலருமான அம்புறோஸ் ஜேக்கப் (அன்டர்சன்) அவர்கள் நேற்று(30-06-2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அம்புறோஸ் ஜோசலீனுடைய அன்பு மகனும் ஞானேஸ்வரியின் அன்புக்கணவரும் திருமதி மேரி நிஷாந்தினி(துஷா), அருணன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜோண் பொஸ்கோவின்(சவுதி)அன்பு மாமனாரும் டனிசியஸ், இரத்தினம்(ஜேர்மன்), மரியரோஸ் (ஜேர்மன்), இராஜேஸ்வரி (டென்மார்க்), ஜோகராணி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவர்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01-07-2003) செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்,யாழ் .திருமறைக் கலாமன்ற கலைத்தூது மணிமண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு,பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செலலப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*19/2,2ஆம் குறுக்குத் தெரு,*
*பாஷையூர்,யாழ்ப்பாணம்.*

(28687) (30-17-18)

தகவல்:
அருணன (மகன்)

### கந்தப்பு பரமானந்தன்

**(இளைப்பாறிய தபாலதிபர்)**

புங்குடுதீவு, 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 92.A,பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட கந்தப்பு பரமானந்தன் அவர்கள் நேற்று (30.06.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*92.A, பருத்தித்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(19712) (30-3217-18)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### வேலுப்பிள்ளை பொன்னம்பலம்

**(ஓய்வுபெற்ற மகப்பேற்று வைத்திய நிபுணர்)**

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட வே.பொன்னம்பலம் 29.06.2003இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை செல்லாச்சியின் புதல்வனும் மேபலின் அன்புக் கணவரும் ஷெரின், விணோஷி ஆகியோரின் தந்தையும் நவரத்தினம், இராசரத்தினம், வில்வரத்தினம், காலஞ்சென்ற நாகரத்தினம், செல்வரத்தினம், நேசரத்தினம், மகாலக்சுமி, தனலக்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (30.06.2003) திங்கட்கிழமை கொழும்பில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

*"ராஜ்மஹால்"*
*தொல்புரம்மேற்கு,*
*சுழிபுரம்.*

(19711) (30-32-12-17)

தகவல்:
திருமதி.இ.செல்வம்
(சகோதரி)

### இராமநாதன் ஆறுமுகம்

நெடுந்தீவு மேற்கு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை, புளியங்குளம் சாம்பல்தீவை வசிப்பிடமாகவும் தற்போது செட்டித்தெருவில் வசித்தவருமாகிய இராமநாதன் ஆறுமுகம் நேற்று (2003.06.30) திங்கட்கிழமை அதிகாலை காலமாகியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதர் - பார்வதிப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்ற சோதிமணி, வள்ளியம்மைஅவர்களின் அன்புக் கணவரும் இளமுருகன் (இந்தியா), காலஞ்சென்றவர்களான சுமதி, புண்ணியகரன், சிவகரன் மற்றும் ஞானகரன் (கனடா), கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரி (இந்தியா), அவர்களின் மாமனாரும் சிந்துயா, சுருதிகா, தர்மதா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற இராசரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர்), தருமலிங்கம் (நெடுந்தீவு), கதிரவேலு (கனடா), காலஞ்சென்ற செங்கமலம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள், இன்று (2003.07.01) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*82/10, செட்டித்தெரு,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

(19713) (30-32-12-17)

தகவல்:
வள்ளியம்மை
*(மனைவி)*

## கண்ணீர் அஞ்சலி

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை
உடுப்பிட்டி உப அலுவலக பொறுப்பதிகாரி
திருமதி செ.சிவம் அவர்களின்
அன்புச் சகோதரி

**திருமதி மோகன் வனிதா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வட.தெ.மே.பி.சபை
உபஅலுவலகம்.

*உடுப்பிட்டி.* (C/28681) (30-29-12-18)

## மரண அறிவித்தல்

### திருமதி லூர்த்துமேரி அந்தோனிமுத்து

தும்பளை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி லூர்த்துமேரி அந்தோனிமுத்து 30.06.2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சீ.அந்தோனிமுத்து (இளைப்பாறிய உப அதிபர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ) அவர்களின் அன்பு மனைவியும் மோசேஸ் தேவரத்தினம் (ஆசிரியர் ஹாட்லி கல்லூரி), சாந்தினி (இத்தாலி), பிலிப விஜயரத்தினம் (யாழ்பல்கலைக்கழக பொருளியற்துறை 3ஆம் வருடமாணவன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ம.கிருபைராஜா-(இத்தாலி) அவர்களின் அன்பு மாமியாரும் கிருபாலினி, கிபிர்சன்(இத்தாலி) அவர்களின் அன்புப் பேர்த்தியும் ஜோன்ஜோசப்பின் அன்புச் சகோதரியும் மரியம்மாவின் மைத்துணியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (01.07.2003) செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில் புனித மரியாள் ஆலயத்தில் இரங்கல் திருபலியின் பின்னர் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(30-32-12-18)

*அமலஅகம்*
*லூர்துமாதா கோவிலடி,*
*தும்பளை*
*பருத்தித்துறை.*

(28689)

தகவல்:
சீ.அந்தோனிமுத்து (கணவர்)


## லஷ்சுமி சினிமா இணுவில்

விஜகாந்த், சௌந்தர்யா, கவுண்டமணி, செந்தில் நடித்த

**சொக்கத்தங்கம்** (ரீலஸ்)

காட்சி நேரம்: 11.00,3.00,7.00 (பி.நே.)

## நாகம்ஸ் சுன்னாகம்

முரளி, தேவயானி அப்பாஸ், ஆனந்தராஜ் நடித்த

**காதலுடன்** (ரீலஸ்)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பி.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு விசேடகாட்சி 7.00 (பி.நே.)

## நிறைஞ்சனாஸ்

சத்தியராஜ், ரம்பா, செந்தில், கபாலி, மணிவண்ணன் நடித்த

**மிஸ்ரர்**

காட்சி நேரம்: 11.00, 3.45, 6.00 (பி.நே.)

தினசரி இரவு 8.45 இற்கு

THE BOURNE IDENTITY

(28-12-17)

## லிபேட்டி அச்சுவேலி

விஜய், மீராஜஸ்மின் நடிக்க



**புதிய கீதை** (ரீலஸ்)

தினசரி காட்சி 3.00, 7.00(பி.நே)

**BEHIND ENEMY LINES** (ரீலஸ்)

(சண்டைப்படம்)

தினசரி காலை 11.00 மணி

## ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு.

KS ரவிக்குமாரின்



சரத்குமார், ஜெயராம், மீனா, ரம்யாகிருஷ்ணன்

நேரம் 10.30, 2.30, 6.30 (பி.நே.)

# நிமலராஜன் கொலை வழக்கு; சந்தேக நபர்களுக்கு பிணை

யாழ்ப்பாணம்,ஜூலை1

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஈ.பி.டி.பி. அமைப்பின் உறுப்பினர்கள் இருவர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

காராளசிங்கம் செந்துபரன், ஜெகதன் என அழைக்கப்படும் கந்தசாமி ஜெகதீஸ்வரன் ஆகிய இருவரும் தம்மைப் பிணையில் விடுமாறு கோரி வவுனியா மேல் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுவை விசாரணை செய்த மேல்நீதிமன்றம் இருவரையும் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு யாழ். நீதிமன்றத்துக்கு உத்தரவிட்டது.

இதன்படி இருவரும் யாழ்.நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டு தலா 50 ஆயிரம் ரூபா ஆட்பிணைகளில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (ஒ-3)

# ஸ்ரீலங்கன் விமான சேவை அலுவலகம் நகரில் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை1

ஸ்ரீலங்கன் விமான சேவை (Sri lankan Air lines) நிறுவனத்தின் யாழ. பயணச்சீட்டு அலுவலகம் நேற்றுக்காலை வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள இப்புதிய அலுவலகத்தை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஸ்ரீலங்கன் எயர் லைன்ஸ் நிறுவன வர்த்தக சந்தைப்படுத்தல் பணிப்பாளர் வஸ்.ஜெயசீலன் நாடவை வெட்டித் திறந்துவைத்தார்.

எயர் லைன்ஸ் நிறைவேற்றுப பணிப்பாளர் படி மெல்டிஸ், சிலிங்கோ ரூஸ் அன் ரவல்ஸ் நிறுவனப் பணிப்பாளர் ரஞ்சினி பெர்னாண்டோ, ரணில் வசீகரன் மற்றும் திருமதி ஜெயசீலன் ஆகியோர் மங்கல விளக்கேற்றி இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

நேற்று திறந்துவைக்கப்பட்ட அலுவலகத்தில் ஸ்ரீலங்கன் விமான சேவை விமானங்களுக்கான பயணச்சீட்டுக்கள் வழங்கல், ஆசனப்பதிவுகள் மற்றும் ஆசன மீள்பதிவுகள் செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

## கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவில் எமது கப்பல் தாக்கப்பட்ட சம்பவம், மக்கள் மத்தியில் ஓர் ஆத்திரமூட்டுகின்ற, சினமூட்டுகின்ற செயற்பாடாகவே கருதப்படுகின்றது. தொடர்ந்து இப்படியான மிலேச்சத்தனமான அத்துமீறல்கள் சமாதான சூழ்நிலையைப் பாதிக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

இதனை நோர்வேத் தரப்புக்கும் அரசுத் தரப்புக்கும் கண்காணிப்புக் குழுவுக்கும் மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளோம். ஆகவே, இப்படியான சூழ்நிலைகளை மாற்றி அமைப்பதற்கு அரசு, படைத்தரப்பைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கவேண்டும்.

முல்லைத்தீவுக் கடலில் தாக்குதலுக்குள்ளாகிய புலிகளின் கப்பலில் அதனை அடையாளம் காட்டக்கூடிய கொடியோ, பதிவுகளோ இருக்கவில்லை என்றும் -

இதன்மூலம் 1982ஆம் ஆண்டு டிசெம்பர் 10ஆம் திகதி வெளியிடப்பட்ட ஐநா. கடல் சட்டத்தினை விடுதலைப் புலிகள் மீறியுள்ளதாகவும் -

மேற்படி தாக்குதல் சம்பவம் குறித்த அறிக்கையில் கண்காணிப்புக் குழு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

## சடலத்தைப் பொறுப்பேற்க கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை1

நெஞ்சுநோ காரணமாக ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியிலிருந்து, கடந்த 28ஆம் திகதி யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட, கந்தையா நாகராசா (வயது56) என்பவர் அன்றைய தினமே அங்கு உயிரிழந்துவிட்டதாகவும் - அவரது சடலத்தை பொறுப்பேற்க உறவினர்களை வரும்படியும் -

யாழ்.ஆஸ்பத்திரி நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஒ-9)

## ஹபராதுவ பகுதியில் குண்டு வெடித்து மூவர் பலி!

ஹபராதுவ பகுதியிலுள்ள ஒரு தும்பு ஆலை அருகே நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட குண்டுவெடிப்பில் மூவர் கொல்லப்பட்டனர். வேறு ஆறு பேர் காயமடைந்து கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இறந்தவர்களில் ஒருவர் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர் எனக் கூறப்பட்டது. தும்பு ஆலை அருகே கூடியிருந்தவர்கள் மத்தியில் இருநதே இந்தக் குண்டு வெடித்திருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது என்று பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர்.

## பேச்சு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டிருந்தது. அதனால், தமிழீழத்துக்கு வந்து உடனடியாக உடற்பரிசோதனைக்காக வெளிநாடு செல்ல வேண்டி ஏற்பட்டது. ஆனால், தற்சமயம் அவரது உடல்நிலை பணியைச் செய்யக்கூடியதாகவே இருக்கின்றது. சமாதானப் பேச்சுத் தொடர்பான பணிகளை அவரே மேற்கொண்டு வருகின்றார். - என்றார் அவர் (ஒ-3)

## பொலீஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள் ளனவே" என்று செய்தியாளர்கள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர்.

இதுதொடர்பாக அருகில் இருந்த பொலீஸ்மா அதிபரிடம் கேட்டு அறிந்தபின், இவ்விடயம் தவறுதலாக ஏற்பட்டுள்ளது. இனிமேல் அப்படி எவராவது படிவங்களை வழங்கினால் கிழித்து எறியுங்கள்" என்றார் அமைச்சர்.

(மற்றொரு செய்தி 2ஆம் பக்கத்தில்)

# தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைப்பாடு குறித்தும் தூதர் தமிழ்ச்செல்வனிடம் கேட்டறிந்தார்.

டோக்கியோ மாநாட்டில் பங்குபற்றாமைக்கான காரணம் மற்றும் இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்கள் குறித்து தமிழ்ச்செல்வன் அப்போது எடுத்துக் கூறினார்.

சந்திப்பை அடுத்து, தமிழ்ச்செல்வன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்தியமைக்கான காரணங்களை ஜப்பான் தூதரிடம் விளக்கிக் கூறினேன். தமிழ் மக்களின் அவசர, மனிதாபிமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய தீர்மானங்களை, பரிந்துரைகளை டோக்கியோ உதவி வழங்கும் மாநாடு வழங்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினேன்.

சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதாயின் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றக்கூடிய தீர்க்கமான முடிவுகளை அரசு எடுக்கவேண்டும் என்பதையும் கடந்தகாலப் பேச்சுக்களில் ஏற்பட்ட பின்னடைவுகள், மக்களின் நம்பிக்கையனங்கள் ஆகியவற்றைத் தீர்க்கக்கூடிய வகையில் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்பதையும் எடுத்து விளக்கினேன்.

மக்களின் அவசர, மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய அதிக வலுவுள்ள கட்டமைப்பு ஒன்று நிறுவப்படவேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டினேன். இந்தக் கட்டமைப்பின் அவசியத்தை ஜப்பான் தூதர் ஏற்றுக்கொண்டார். அரசும் இதை உணர்ந்து செயற்படும் பட்சத்தில் மீண்டும் பேச்சை ஆரம்பிக்கக்கூடிய நிலைப்பாடு உருவாகும்.

சர்வதேச சமூகத்தினதும் தமது நாட்டினதும் எதிர்பார்ப்புக்களை இந்தச் சந்திப்பின்போது ஜப்பானியத் தூதர் விளக்கினார்.

தற்போது அரசுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நிலவிவரும் கருத்து முரண்பாடுகள் சமாதான முன்னேற்பாடுகளைப் பாதிக்கக்கூடாது. இந்தவகையில் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படவேண்டியது அவசியம். விடுதலைப் புலிகள் மீது சர்வதேச சமூகம் அழுத்தம் பிரயோகிக்கவேண்டிய தேவை இல்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகளை, அவர்களின் அபிலாஷைகளை நாம் முன்வைக்கின்றோம். அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்ட, உரிமை மறுக்கப்பட்ட தரப்பு என்ற ரீதியில் தமிழ் மக்கள்தான் பாதிக்கப்பட்டுள்ளார்கள். புலிகள் முன்வைப்பது மக்கள் சம்பந்தப்பட்ட விடயங்களைத் தான். ஆகவே, எம்மீது அழுத்தம் பிரயோகிக்கத் தேவையில்லை. எமது மக்களை ஆக்கிரமித்து நிற்பவர்களுக்கு எதிராகவே சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டும்.

நோர்வே தற்போதும் அனுசரணையாளர்களாகச் செயற்பட்டு வருகின்றது. தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கும் பேச்சுக்களை மீண்டும் முன்னேற்றகரமாகக் கொண்டு செல்வதாயின், நோர்வேயின் அனுசரணை அவசியமாகும். யதார்த்தமான களநிலைக்கேற்ப நடைமுறைச் சாத்தியமான முடிவுகளை அரசு எடுக்கும் போது தொடர்ந்து நோர்வே, அனுசரணையாளராக இருக்கமுடியும் - என்றார் அவர். (ஒ-3-4)

## 3 மாதங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யளவில் கைச்சாத்திடப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

46 பக்கங்களைக் கொண்டதாக அமையும் இந்த உடன்பாட்டில் சுதந்திரக்கட்சி சார்பில் அதன் செயலாளர் மைத்திரிபால சிறிசேனாவும் ஜே.வி.பி.சார்பில் அதன் செயலாளர் ரில்வின் சில்வாவும் கையொப்பம் இடுவர்.

இந்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டு, 3மாதகாலத்தில் பொதுத் தேர்தலை நடத்த ஜனாதிபதி முடிவு செய்துள்ளார் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தேர்தலுக்கு முன் ஜனாதிபதி தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி தமது சகாக்களைக் கொண்டு அமைச்சரவை ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளார் என்றும் கூறப்பட்டது. (ஒ-3)


**கணித வகுப்புக்கள்**

தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு கணித வகுப்புக்கள் அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் தனியாகவும், குழுவாகவும் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு- ஆசிரியர்
99.அரசடி வீதி.
யாழ்ப்பாணம்.
தொலைபேசி- 071-2336710
(19651) (30-32-12-17)

**A/L 2005**

LOGIC - P.கமல்
ஆரம்பம்:-02.07.2003
புதன் 4.மணி (ப.நே)
திகழ் கல்வி நிறுவனம்
K.K.S. வீதி, இணுவில்
(19670) (30-12-17-32)

**BRIGHTMAN**

பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
புதிய பிரிவு
சரளமாக உரையாட
சிங்களம்
BY:லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம்:
02-07-2003 WED.4.00p.m.
(19668) (30-17-12)

**ஆள் தேவை**

ஓவ் செற் (ஹமாடா) மெசின் இயக்கத் தெரிந்தவர்கள் தேவை. நேரில் வரவும்.
சாரதி கணனிசார் சேவைகள்
114,பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.
(19616) (30-32-12-17)

**UDUVIL GIRLS' COLLEGE COMPUTER UNIT**

COURSES:
Dip.In.Micro Soft Office
Certificate courses
★ Ms.Word
★ MS.Excel
★ Ms.Access
★ Powerpoint

Courses will commence on Saturday 05.07.2003 at 4.00 p.m. Application Forms can obtained at the College office.

Course Director,
Uduvil Girls' College,
Computer Unit.
(30-14-12-17) (சி-28547)

இன்று யாழ்.நகரில்!
உங்களுக்காக உங்கள் சுவைக்கு அமுதூட்ட
அகமகிழ அள்ளிச் சென்று சுவைத்திட

**Alasics Ice cream**

உங்கள் சுவையின் தெரிவிற்கு.........

விலைவிபரம்

| வகை | தனி | 500ml | 1000ml | 2000ml | 4000ml |
|---|---|---|---|---|---|
| (1) மில்க்பொப் | 12/- | - | - | - | - |
| (2) பலூடா | 14/- | - | - | - | - |
| (3) ஐஸ்சொக் | 22/- | - | - | - | - |
| (4) ஐசிபோல் | 22/- | - | - | - | - |
| (5) கிக்குள் பெனி | 24/- | - | - | - | - |
| (6) வனிலா/ சொக்லெட் | 16/- | 80/- | 115/- | 205/- | 355/- |
| (7) புருட் அன் நட்ஸ் | 18/- | 98/- | 160/- | 285/- | 505/- |
| (8) நியோ பொலிட்டன் | - | - | 138/- | 210/- | - |

(மேற்படி விலைகள் அதிகூடிய சில்லறை விலைகளாகும்)

திருமண வைபவங்கள், பிறந்த நாள் விழாக்கள், இன்னும் அனைத்து மங்களகரமான நிகழ்வுகளுக்கும் விசேட விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ள அழையுங்கள்!

0777 - 171760

தொடர்புகளுக்கு:
Alerics Dairies Ltd.
No,198, Kandy Road,
Jaffna.

(19538) (30-29-17-12)

**இலவச கணனிப் பயிற்சி நெறி**

இவ் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அல்லது சுயமாக தயாரித்து கீழ் காணும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பவும்.

பதிவாளர்
இல.07, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

APPLICATION FORM

Full Name : ...............
Address : ...............
...............
Date of Birth : ...............
Select Course : ...............
............... ...............
Date Signature of Applicant

பிரிவு IV ஆரம்பம்
29.06.2003(3.00p.m)
05.07.2003(3.00p.m)

Diploma Courses
Diploma in Microsoft Office XP
Diploma in Desktop Publishing
Diploma in Windows Application
Diploma in Hardware Engineering
Diploma in Computer Programming
Diploma in Visual Basic Programming

Certificate Courses
Word XP
Excel XP
Access XP
PowerPoint XP
Corel Draw 11
Page Maker 7
Visual FoxPro 6
HTML, Java
Oracle, C/C++
Pascal

JAFFNA TECHNICAL INSTITUTE.
JAFFNA SRI LANKA.
e-mail: jti@sltnet.lk

Head Office
Number 11/10B, Stanley Road,
Jaffna.

Branch
107, Palaly Road,
Jaffna.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.07.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.